விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 வைகாசி 05 ஞாயிற்றுக்கிழமை (18.05.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 151




## ★ புறக்கோட்டைக் குண்டுவெடிப்பு ★

# குண்டு பொருத்திய மோ. சைக்கிள் பிள்ளையானின் நண்பருடையது?

### சந்தேக நபர் திருமலையில் குடும்பத்துடன் கைது

(கொழும்பு)

கொழும்புக் கோட்டை சம்போதி விகாரைக்கு அருகில் பொலிஸாரின் பஸ்கள் மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் நேற்று அதிகாலை திருகோண மலை பத்தாம் குறிச்சிப் பகுதியில் வைத்து சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## கைக்குண்டுத் தாக்குதலில் வவுனியாவில் 17 பேர் காயம்

(வவுனியா)

வவுனியா பஜார் வீதியில் மில் சந்தியில் நேற்று முற்பகல் விசேட அதிரடிப் படையினரின் கவச வாகனத்தை நோக்கி வீசப்பட்ட கைக்குண்டு இலக்குத் தவறி வீழ்ந்து வெடித்ததால் 17 பொதுமக்கள் காயமடைந்தனர்.

இவர்களில் நால்வரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. வவுனியா பஜார் வீதியும் மில் வீதியும் சந்திக்கும் இடத்தில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இந்தக் கைக்குண்டு வீசப்பட்டுள்ளது.

அப் பகுதியிலுள்ள உயரமான கட்டடம் ஒன்றிலிருந்து விசேட அதிரடிப் படையினர் பயணித்த கவச (12 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் பறந்த புலிகளின் வானூர்தி ராடரில் தெரிந்ததாம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் வான்புலிகளின் வானூர்தி வன்னியிலுள்ள இரணைமடு வானூர்தி ஓடுபாதையை அண்டிய பகுதியில் பறப்பில் ஈடுபட்டதாகப் படைத் தரப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் படைத் தரப்பு மேலும் தெரிவித்துள்ளதாவது, வன்னி வான்பரப்பில் புலிகளின் வானூர்தி மேலெழுந்ததும் அது படையினரின் ராடர் திரைகளில் அவதானிக்கப்பட்டுள்ளது. (12ஆம் பக்கம் பார்க்க)

## பெரும்பான்மை அற்ற கிழக்கு மாகாண சபை

# ரவூவ் ஹக்கீம் முதலமைச்சரானால் ஆதரவு வழங்குவேன்-ஹிஸ்புல்லா

(மட்டக்களப்பு)

முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூவ் ஹக்கீமோ அல்லது வேறொரு முஸ்லிம் உறுப்பினரோ கிழக்கு மாகாண சபை முதலமைச்சராக நியமிக்கப்பட்டால் அதற்கு நிச்சயமாக ஆதரவு வழங்கவிருப்பதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்டுக் கிழக்கு மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழங்கிய உறுதி மொழிகளை மீறியிருப்பதாகக் ஹிஸ்புல்லா கூறியுள்ளார்.

முஸ்லிம் பிரதிநிதிகள் கூடுதலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் தனக்கு முதலமைச்சர் பதவியும் தமிழ்ப் பிரதிநிதிகள் கூடுதலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் பிள்ளையானுக்கு முதலமைச்சர் பதவியும் வழங்கப்படும் என ஜனாதிபதி சர்வதேசம் அறிவதற்குக் கூறியிருந்ததாகவும் எனினும் அந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ துரோகம் இழைத்துவிட்டார்

## முஸ்லிம் உறுப்பினர் ஆதங்கம்

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு முன். முஸ்லிம் சமூகத்திற்கு அளித்த வாக்குறுதியை இந்த அரசாங்கம் மீறியுள்ளதோடு மீண்டும் முஸ்லிம் சமூகத்தின் முதுகில் குத்தி விட்டது

கிழக்கு மாகாண முஸ்லிம்களால் மறக்க முடியாத, மன்னிக்க முடியாத ஒரு வரலாற்றுத் துயரத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு முஸ்லிம்களுக்குப் புரிந்து விட்டது என கிழக்கு மாகாண சபையின் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப் பினர் ஜபீல் தெரிவித்தார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இளைஞர் காங்கிரஸ் அமைப்பாளரான ஜனாப் ஜமீல் நடந்து முடிந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி பட்டியலில் மு.கா சார்பில் போட்டியிட்டு 20 ஆயிரத்துக்கும் அதிகமான விருப்பு வாக்கு (12ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ்மா அதிபர் அடுத்த மாதம் ஓய்வு

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் விக்டர் பெரேரா அடுத்த மாத இறுதியில் தனது பதவியிலிருந்து ஓய்வு பெறுகின்றார்.

அவர் தான் ஓய்வு பெறுவது தொடர்பான ஆவணங்களை தேசிய பொலிஸ் ஆணைக் குழுவுக்கு அனுப்பி வைத்துள்ளார். சுமார் 35 ஆண்டுகாலம் பொலிஸ் திணைக்களத்தில் கடமையாற்றிய இவர்,

உதவிப் பொலிஸ் அத்தியட்சகராகப் பொலிஸ் திணைக்களத்தில் இணைந்து கொண்டார். பொலிஸ் மாஅதிபர் விக்டர் பெரேராவின் பதவிக் (12 ஆம் பக்கம் பார்க்க)



குலம் காக்கும் தாயே...!

உ
தில்லையம்பதியாள் துணை

சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில் தில்லையம்பதி

அருள் மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்

இரதோற்சவம் 2008.05.18





பல்லவி

சிந்தனை யெல்லாம் நீயே அன்னை சிவகாமி - தினம்
வந்தனை செய்திடுவேன் மங்கலமே வா நீ - எந்தன்

அனுபல்லவி

எந்தை யூரில் நிறைந்திருக்கும் எழில் வனத் தாய் நீயே - எம்
சிந்தை சுகம் பெறவே சித்திரத் தேரிலே வாநீ !
(எந்தன் சிந்தனையெல்லாம் ...)

சரணம்

கருவண்டுக் கண்கள்கொண்ட கானகக் குழலி - உன்
கண்ணிமையும் கதை சொல்லுமென் காரியங்கள் மறந்திடுமே
பிறை போல நுதல் கொண்ட பௌர்ணமி நிலவே
குறையேது நீயிருந்தால் "குலம் காக்கும் தாயே !"
(எந்தன் சிந்தனையெல்லாம் ...)

பாடல் ஆக்கம்: என்.பிறேமசீலன்.

திருக்கோயில் பரிபாலன சபை.

## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**ஞாயிறு தோறும் இரவு 11.00 மணிக்கு 'தமிழன்' தொலைக்காட்சியில் நடைபெறும் மருத்துவ நிகழ்ச்சியில் Dr. பஸ்லூர் ரஹ்மான் (M.B.B.S) அவர்களினால் வழங்கப்பட்ட மருத்துவ நிகழ்ச்சியில் (11.05.2008) பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட மிகவும் பெறுமதி யான விழிப்புணர்வை உருவாக்கும் தகவல்கள் கீழே.**

**மாணவர்களே, பெற்றோர்களே!** தடுப்பூசி (Vaccine) தொடர்பாக பின்வரும் விடயங்களை தெளிவுபடுத்துகிறார். அவர் கூறியதை அப்படியே தருகிறேன்.

'நமக்கு மறைக்கப்பட்ட மருத்துவ உண்மை என்னவென்றால் போலியோவிற்காக தடுப்பூசி (Vaccine) போட்டு அதன் காரணமாக ஜுரம் (காய்ச்சல்) ஏற்பட்டு போலியோ (Polio) வியாதியினால் தாக்கப்பட்டவர்களும் இருக்கிறார்கள்.

**This is Called 'V.A.P.P.'**

**'VACCINE ASSOCIATED PARALYTIC POLIO MYELITIS'** அதாவது தடுப்பூசி (Vaccine) போட்டதன் காரணமாக ஏற்பட்ட போலியோ **(Polio myelitis)**

இது **Medical Journals** இல் பதியப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல: இது **மருத்துவ வட்டாரங்களினால் அதிகார பூர்வமாக அறியப்பட்ட உண்மை. ஆனால் மக்களுக்கு மறைக்கப்பட்ட ஒரு துரோகம்.**

இப்படி ஒரு சூழ்நிலை இருக்கும்போது ஒரு குழந்தைக்கு இப்படி ஒரு நிலை ஏற்பட்டால், அவர்கள் கூறிவிடுவார்கள்.

**'இதற்கும் அதற்கும் சம்பந்தமேயில்லை'**

நீங்கள் உங்கள் தடுப்பூசி மருத்துவ அதிகாரிகளிடம் கேளுங்கள். இப்படி ஒரு செய்தி (V.A.P.P) இருக்கிறதே உண்மையா? என்று கேளுங்கள். அது உண்மை என்றால், தடுப்பூசி போடுவது பற்றி தாய்மார்களாகிய நாங்கள் சிந்திக்க **வேண்டியிருப்பது** நியாயமானது தானே என்று கேளுங்கள். எங்களுடைய அனுமதி இல்லாமல் தடுப்பூசி போடமுடியாது என்பதை தெளிவாக கூறி விடுங்கள்.

இனிமேல் எங்களுடைய அனுமதி இல்லாமல் (பெற்றோர்) மாணவர்களுக்கு தடுப்பூசி போடமுடியாது என்பதனை உறுதியாகவும் தெளிவாகவும் கூறிவிடுங்கள்.

தடுப்பூசி எதிர்காலத்தில் வரக்கூடிய நோயைத் தடுப்பது உண்மையெனில்,

உதாரணமாக போலியோவிற்காக தடுப்பூசி போட்டால்

1. எதிர்காலத்தில் போலியோ வரவே வராது என்ற உறுதிப்பாட்டையும்

2. தடுப்பூசி ஏற்றப்பட்ட பின் **உடனடியாக நிகழும் பாதகமான விளைவுகளுக்குரிய பொறுப்பை பாடசாலை நிர்வாகத்திடமும், தடுப்பூசிக்குப் பொறுப்பான மருத்துவ அதிகாரிகளிடமும் உறுதிப்படுத்தப்பட்ட வரைவாகக் கேளுங்கள்.**

இந்த இரண்டிற்கும் **அவர்கள் தயங்குகிறார்கள் என்றால்,** (மட்டும்) நிச்சயமாக உறுதியாக கூறலாம்.

'அவர்களுடைய தடுப்பூசி மருந்தில் அவர்களுக்கே பூரண நம்பிக்கை இல்லாத நிலையில் தான் உங்களுக்கு தடுப்பு மருந்து ஏற்றுகிறார்கள் என்பதை **தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள். அப்படியில்லையெனில்,** அவர்கள் தயங்குவதற்கு எந்த நியாயமுமில்லை. உறுதிப்பாடு கேட்கும் **முழு உரிமையும்** (எந்தப் பயமோ, தயக்கமோ இல்லாமல்) உங்களுக்கு உண்டு என்பதை முதலில் புரிந்து கொள்ளுங்கள்'

இவ்வாறு **Dr.**பஸ்லூர் ரஹ்மான் **11.05.2008** அன்றைய நிகழ்ச்சியில் கூறியிருக்கிறார்.

**18.05.2008 அன்று நடைபெறப்போகும் நிகழ்ச்சியில் தடுப்பூசி சம்பந்தமான முழுமையான, நிறைவான, விரிவான** விரிவுரை நிகழ்த்தவிருக்கிறார் என்பதை அறியத்தருகிறேன்.

**Dr.(Acu.) க.ரகுராம்**
**மடத்தடி, உரும்பிராய் வடக்கு.**

(1192)

# 17-வது திருத்தச்சட்டமூலத்தை அமுல்படுத்தக் கோரி நீதிமன்றம் செல்ல முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானம்

(கொழும்பு)

அடுத்த தேர்தலொன்று நடத்தப்படுவதற்கு முன்னர் 17-வது திருத்தச் சட்ட மூலத்தை அரசாங்கம் அமுல்படுத்தவேண்டுமெனக் கோரி நீதிமன்றம் செல்வதற்கு தீர்மானித்திருக்கும் சிறிலங்கா முஸ்லிம் கரங்கிரஸ், இதற்கு ஜே.வி.பி, லங்கா சமசமாஜக் கட்சி உள்ளிட்ட ஏனைய அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் முடிபெடுத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணக்கப்பாடொன்றுக்கு வந்திருப்பதாகத் தெரிவித்திருக்கும் முஸ்லிம் காங்கிரஸின் பிரதிப் பொதுச் செயலாளர் நிஸார் காரியப்பர், அடுத்த வாரத்தில் ஏனைய கட்சிகளுடன் இணக்கப்பாடு காணப்பட்ட பின்னர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்படுமெனக் கூறியுள்ளார்.

சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு, பொதுச் சேவைகள் ஆணைக்குழு, தேர்தல்கள் ஆணைக்குழு போன்றன இயங்காவிட்டால் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல்களை நடத்த முடியாது. எனவே 17-வது திருத்தச் சட்ட மூலம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 10ஆம் திகதி நடைபெற்று முடிந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் எமக்கு நல்ல அனுபவம் கிடைத்துள்ளது. எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக அரசாங்கத்தின் அடியாட்கள் சுதந்திரமாகத் திரிந்து வன்முறைகளில் ஈடுபட்டிருந்தனர் என நிஸார் காரியப்பர் குறிப்பிட்டார்.

இதேவேளை 17-வது திருத்தச் சட்ட மூலத்தை முழுமையாக அமுல்படுத்துவது நிச்சயம் நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்று என தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையத்தின் இணை ஏற்பாட்டாளர் பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்துள்ளார்.

சுதந்திர ஆணைக்குழுவின் அவசியத்தை கடந்தவாரம் இடம்பெற்ற தேர்தல் வலியுறுத்தியுள்ளது.

17-வது திருத்தச் சட்டமூலம் அமுல்படுத்தப்படவேண்டுமெனக் கோரி உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்வதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எடுத்திருக்கும் தீர்மானத்தை பவ்ரல் அமைப்பு வரவேற்றுள்ளது.

அரசியலமைப்பு சபையை நியமிக்காமல் ஜனாதிபதி காலத்தை இழுத்தடிப்பதற்கு எந்தவிதமான காரணங்களும் இல்லையென பவ்ரல் அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி ரொட்றிக்கோ தெரிவித்துள்ளார். (ந-5)

## பண்ணிசைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோவிலடி திருநெறிய தமிழ் மறைக் கழகம் நடாத்தும் பண்ணிசை மனனப் போட்டிகள் ஆலய கல்யாண மண்டபத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

# வன்னிப் படைத்தலைமையகத்திற்கு இராணுவத் தளபதி நேற்று விஜயம்

(வவுனியா)

இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நேற்றுக் காலை வன்னிக் கூட்டுப்படைத் தலைமையகத்திற்கு விஜயம் செய்து களமுனை பாதுகாப்பு நிலைவர மீளாய்வுகளை மேற்கொண்டிருக்கிறார்.

இராணுவத் தளபதி தலைமையில் சென்ற உயர் மட்டக்குழுவினரை வன்னி மாவட்ட படைத்தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் ஜயசூரிய வரவேற்றார்.

அதனையடுத்து வன்னிக் கூட்டுப்படைத் தலைமையகத்தில் களமுனைத் தளபதிகளுடன் இராணுவத் தளபதி விசேட கலந்துரையாடல்களை நடத்தினார்.

இந்தக் கலந்துரையாடலில் களமுனையில் உள்ள படையணிகளின் தளபதிகள் மற்றும் பிரிகேடியர்கள் உட்பட மேலும் பல படை அதிகாரிகள் கலந்து கொண்டனர். (ந-5)

## சமூக அபிவிருத்தியும் முகாமைத்துவமும் டிப்ளோமாவுக்கு விண்ணப்பம் கோரல்

(வவுனியா)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் வியாபாரக் கற்கைகள் பீடத்தால் ஆரம்பிக்கப்படவுள்ள இரண்டு வருட பகுதிநேர 'சமூக அபிவிருத்தியும் முகாமைத்துவமும்' டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் 13.06.2008ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என வவுனியா வளாக முதல்வர் அறிவித்துள்ளார்.

விண்ணப்பதாரிகள் க.பொ.த (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் குறைந்தது 3 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியும் குறைந்தது 5 ஆண்டுகள் வேலை அனுபவம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

அல்லது க.பொ.த (உ/த) பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் சித்தியெய்தியிருத்தல் வேண்டும். சமூக அபிவிருத்தி செயற்பாடுகளில் ஈடுபாடுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

கற்கை நெறிக்கான விண்ணப்ப படிவத்தையும் விபரங்களையும் பெற்றுக்கொள்வதற்கு ரூபா 100ஐ வவுனியா வளாக நிதிப் பிரிவில் செலுத்தி பற்றுச் சீட்டை அல்லது சிரேஷ்ட உதவி நிதியாளர், வவுனியா வளாகம் என்ற பெயருக்கு வவுனியா தபாலகத்தில் மாற்றக் கூடியவாறு ரூபா 100க்கான காசுக்கட்டளையை எடுத்து அத்துடன் சுயவிலாசமிடப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையை இணைத்து சிரேஷ்ட உதவிப் பதிவாளர், வவுனியா வளாகம், பூங்கா வீதி, வவுனியா என்ற விலாசத்திற்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். (ஓ)

## விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

இலங்கை ஆயுர்வேத சேவையிலுள்ள வைத்திய உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைகாண் பரீட்சை ஆயுர்வேத திணைக்களத்தினால் கொழும்பில் நடாத்தப்படவுள்ளது.

பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களை திணைக்களத் தலைவரூடாக இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவாளர், பரீட்சைகள் பகுதி, ஆயுர்வேதத் திணைக்களம், நாவின்ன, மகரகம எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

மேலதிக தகவல்களுக்கு 16.05.2008 ஆம் திகதிய வர்த்தமானியை வலம்புரிக் காரியாலயத்தில் பார்வையிடலாம். (ஓ)

## வறிய மாணவர்களுக்கு கியூடெக்-கரித்தாஸ் உதவி

(கோப்பாய்)

கோப்பாய் தெற்கு றோமன் கத்தோலிக்க பாடசாலையைச் சேர்ந்த வறுமைக்கோட்டின் கீழுள்ள 64 மாணவர்களுக்கு கியூடெக்-கரித்தாஸ் நிறுவனத்தினரால் சப்பாத்துக்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (ஓ-134)

## முல்லைத்தீவில் உள்ள மருத்துவமனை மீது எறிகணை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நட்டாங்கண்டல் மருத்துவமனை மீது படையினர் எறிகணைத் தாக்குதலை நடத்தியுள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதலில் மருத்துவ மனையின் வெளிநோயாளர் பிரிவு, மகப்பேற்று விடுதி என்பன பலத்த சேதமடைந்துள்ளன. (ந-5)

## அல்லைப்பிட்டியில் மருத்துவ சேவை

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக் கிளையினரால் அல்லைப்பிட்டியில் மருத்துவ சேவை நடத்தப்பட்டு வருகிறது.

இச்சேவை வாரத்தில் ஒரு தடவை நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-134)

## பாராட்டு விழா

எம்.சி.எஸ். நிறுவனத்தில் கணனிப் பொறியியலாளர் கற்கையினை மேற்கொண்டு சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளும் மாணவர்களுக்கான பாராட்டு விழாவினை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடாத்தவுள்ளது. (ஓ)

## கௌரவிப்பு விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச சபைப் பிரிவின் வியாபாரிமூலை கலைமணி சனசமூக நிலையகல்விக் கௌரவிப்புவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை வியாபாரிமூலை நாச்சி மார் ஆலய முன்றலில் கே.மோகனதாஸ் தலைமையில் நடைபெறவுள் ளது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப் பாளர் வைத்திய கலாநிதி ஏ.கேதீஸ்வரன் இவ் விழாவில்ள பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (ஓ-52)

## நெல்லியடி இல.வங்கிக்கு புதிய முகாமையாளர்

(பருத்தித்துறை)

யாழ்.இலங்கை வங்கி உத்தியோகத்தர் கே.சகாதேவன் இலங்கைவங்கித் தலைமையகத்தால் நெல்லியடி இலங்கை வங்கி முகாமையாளராகப் பதவி உயர்த்தப்பட்டுப் பொறுப்பேற்றிருக்கிறார்.

இலங்கைவங்கி, நெல்லியடி கிளை முகாமையாளராகக் கடமையாற்றிய வி.தில்லைநாதன் சேவையிலிருந்து இளைப் பாறியுள்ளமையால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (ஓ)

## நாளைய செயலமர்வு 24ஆம் திகதி இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

தரம் 6,7க்கான வாழ்க்கைத் தேர்ச்சிகளும் குடியுரிமைக் கல்வியும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு நாளை நடைபெறவிருந்த செயலமர்வு தவிர்க்க முடியாத காரணங்களால் எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறும் என யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ந-5)

...நூலகம் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# எண் சோதிடம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

9ஆம் திகதி பிறப்பவர்கள் செயற்கரிய காரியங்கள் செய்ய ஆர்வமுடையவர்கள் சூஷ்மமான மூளை உடையவர்களாக இருப்பார்கள். மேலான இலட்சியங்களுடன் வாழ்ந்தால் வாழ்க்கை வளம் பொருகும். எல்லா எதிர்ப்புகளையும் சாமர்த்தியத்தால் வென்று வெற்றியுடன் வாழ்வார்.

18 இந்த திகதியில் பிறப்பவர்கள் சுய நலத்தை விட்டால்தான் இவர்களுக்கு நன்மையுண்டாகும். அவசரப்பட்டு ஒரு விவகாரத்திலும் சிக்கிக் கொள்ளாமல் இருக்க வேண்டும். எல்லோருடனும் மனக் கசப்பை உண்டு பண்ணக்கூடிய தினமாகையால் இதில் பிறப்போர் கோபத்தையும் பிடிவாதத்தையும் குறைத்துக் கொள்ள வேண்டியது அவசியம் (காதலில் அவசரம் தோல்வியைத் தரும் ) உணர்ச்சிகள் மனதைத் தீவிரமாகத் தூண்டிக் கொண்டே இருக்கும்

27ஆம் திகதியில் பிறப்பவர்கள் நற்காரியங்களிலேயே ஈடுபட்டு நல்ல பலன்களை அடைந்து வருவர். யோசனைகளையெல்லாம் வெற்றிபெறும் அறிவே வெற்றி தரும். இவர்கள் முற்கூறிய இருவரையும் விட சாந்தமானவர்கள். ஆழ்ந்த யோசனைகளும் தளராத உழைப்பையும் உடைய இவர்கள் எல்லா விடயங்களையும் தீவிரமாக ஆராய்ச்சி செய்வர்.

**எழுத்து-ஒன்பது**

பெயரிலுள்ள எழுத்துக்களின் எண்களைக் கூட்டிக் கண்ட தொகை 9 வந்தால் இவ்வெண்ணின் ஆதிக்கம் ஏற்படும். 9 எண்ணின் கீழ் பிறப்பவர்களை விடப் பெயர் எண்ணால் 9 ஆதிக்கம் உடையவர்கள் வெற்றிகரமாக வாழ்வர். ஏனெனில் மற்ற எண்ணில் பிறந்தோரை இப் பெயரின் (9) ஆதிக்கம் சுறுசுறுப்புள்ளவர்களாகவும் தளராத ஊக்கமுடையவர்களாகவும் அசாத்திய சாமர்த்தியசாலிகளாகவும் செய்து வெற்றிபெற துணை புரிகிறது.

இனி 9 எண்ணின் ஆதிக்கம் கொண்ட பெயர் எண்களைக் கவனிப்போம்.

9 இது பெயர் எண்ணாக வந்தால் அறிவையும் ஆற்றலையும் குறிக்கும். நீண்ட பிரயாணங்களையும் சூழ்நிலைகளையும் எதிர்த்து செய்யும் போராட்டங்களையும் முடிவில் வெற்றியையும் குறிக்கும். எதிர்ப்புகளைத் தகர்த்தெறிந்த பின்னர் வெற்றியுடன் சுகமான நீண்டவாழ்க்கை உண்டாகும்.

18. தெய்வீகத்தின் வீழ்ச்சியைக் குறிக்கும். இவ்வெண் கஷ்டங்களையும், காரியங்களுக்கு வீண்தாமதத்தையும் சூழ்ச்சிகளையும் ஆபத்தான எதிரிகளையும் உண்டுபண்ணும். இதனால் குறிக்கப்பெறுவோர் சமூக விரோதமான காரியங்களில் சுயநலத்தால் தூண்டப்பட்டு ஈடுபடுவர்.

மனமறிந்து தவறான தீய காரியங்களை செய்ய நேரும். சுயநலமே வளரும். அருளும் அமைதியுமற்ற பாபகரமான வாழ்க்கை அமையும். இவ்வெண் ஆசைகள் வளர்ந்து தெய்வீகத்தை அழிப்பதைக் குறிக்கிறது. ஆசைகள் முடிவடையும். அருளழியும்(பாரத யுத்தம் 18 நாட்கள் நடந்தது, 18 சைன்யங்கள் யுத்தம் புரிந்தன.

இந்த தாயாதிப் போரில் பாண்டவர்கள் உறவினரில் மூத்தோரையும், ஆசிரியர்களையுங் கூடக் கொல்ல நேர்ந்தது. 18 அத்தியாயங்களாக அமைந்த பகவத் கீதை மிக்க மேலான கிரந்தமான போதிலும் அச்சமயம் யுத்தத்திற்கு தூண்டுகோலாயிற்று.

பொறாமை, வஞ்சகம் தீயினாலும் ஆயுதங்களாலும் ஆபத்து இவைகளைக் குறிக்கும் இவ்வெண் விரும்பத்தக்கதல்ல.

27. இவ்வெண் தெளிவான அறிவையும், இடையறாத உழைப்பையும், செல்வ விருத்தியையும், செல்வாக்கையும், அதிகார பதவிகளையும் குறிக்கிறது. (உத்தியோகத்திற்கான உடுப்புகளை அணியும், பொலிஸ், இராணுவம் முதலியவற்றைச் சேர்ந்தவரானால் இவ்வெண் உடையோர் உச்ச ஸ்தானத்தை அடைவர். இதற்கும் முன்பு கூறப்பட்ட 24ஐப் போன்ற அதிர்ஷ்டம் உண்டு). செய்யும் தொழிலில் சிறந்தவராக மதிக்கப்படுவார். பரோபகாரமான செயல்களிலுல் ஈடுபடுவ துண்டு. இவர்களுக்கு நலன்களைத் தரும் காரியங்களில் தான் இவர்கள் ஈடுபடு வார்கள். இது ஒரு மிக அதிர்ஷ்டமான எண், ஆன்ம லாபமும், மந்திர ஸித்தியும் நிச்சயம் உண்டாகும்.

**பண்டிட் ஸேதுராமன்**

36. இவ்வெண் மிக்க சாமான்ய நிலையில் உள்ள வரையும் பிரசித்தராக்கி சீமானாக்கக் கூடியது. பிறந்த இடத்திலிருந்து தொலைவிலுள்ள பிரதேசங்களுக்குச் சென்ற பின்னரே இவர்கள் பிரசித்தியடைவர். அநேக பிரயாணங்கள் ஏற்படும்.

உயர் பதவியும் கிட்டும். பார்வைக்கு மிக்க அதிர்ஷ்டகரமானதாகத் தோன்றும் இவ்வெண் குடும்ப வாழ்க் கையில் சிக்கல்களை ஏற்படுத்தக் கூடியது. விசுவாசமில்லாதவர்களால் சூழப் படுவர்.

45. இது மிக்க அதிர்ஷ்டகரமான எண்.



கஷ்ட நிலையில் உள்ளவர்களும் பிரசித்தியையும், பெரிய பதவிகளையும் அடைவர். வாக்கினால் பிரசித்தி உண்டாகும். எல்லோரையும் மகிழ்விக்கக் கூடிய காரியங்களிலும், தொழில்களிலும் ஈடுபடுவர். தீவிர உழைப்பாளிகளான இவர்கள் தான் செய்யும் தொழிலில் நிகரற்ற ஸ்தானத்தை வகிப்பார்கள். எப்பாடுபட்டாவது தன் காரியத்தை சாதித்துக் கொண்டு விடுவார்கள். இவர்கள் வாழ்க்கையே நடிப்போ என்று பிரமிக்கும் வண்ணம் நடந்துகொள்வர். தீராத குறை இருந்த போதிலும் பிறர் கண்டுபிடிக்க முடியாதபடி சிரிப்பு மாறாமல் வாழ்க்கையை நடத்துவர். சுக வாழ்க்கையும், புகழும், செல்வமும் அளிக்கும் இவ்வெண் மிகவும் விரும்பத்தக்கதே. நோய்கள் நீங்கும்.

54. இவ்வெண் வாழ்க்கையில் படிப்படியாக வெற்றியையும் முன்னேற்றத்தையும் தரும். தோல்விகளும் ஏற்படுவதுண்டு. வாழ்க்கை யின் முற்பகுதியில் விசேஷ கௌரவமும், புகழும், செல்வமும் ஏற்படும். பிடிவாதமும் முன்யோசனையற்ற காரியங்களும் பிரபலத்தை இழக்கச் செய்யும். பேராசையே இவ்வெண்ணின் சத்துரு . ஜாக்கிரதையாக இல்லாவிட்டால் எல்லாவற்றையும் இழக்கநேரும். கடைசிக்காலத்தில் ஓரளவு வெற்றி மறுபடி கிட்டும். சுதந்திரம் இல்லாத வாழ்க்கை அமையும். (தொடரும்)

# நுளம்புகளின் தொல்லை இல்லாதொழிய...

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் அதிக கால வரலாற்றுப் பெருமை உள்ள இலங்கைத் தீவில் வாழும் நாம், எம்மைவிட மிகவும் புராதனமான வரலாற்றைக் கொண்ட தெனக் கருதப்படும் நோயைப் பரப்பும் நுளம்புகளைப் பற்றி தெளிவான அறிவைப் பெற்றிருந்தால் மட்டுமே எதிர்காலத்தில் அவற்றினால் ஏற்படும் சவால்களைச் சமாளிக்கக் கூடியதாக இருக்கும்.

மருத்துவ விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் சிறப்பாக வளர்ச்சியடைந்ததுபோலவே நுளம்புகளால் பரப்பப்படும் நோய்களும் மலேரியா, யானைக்கால் நோய், டெங்கு,




ஜப்பானிய மூளைக் காய்ச்சல், சிக்குன் குனியா என நீண்டு செல்கிறது.

மலேரியா வை ஒத்த குணங்குறிகளுடைய நோய்களைப் பற்றி புராதன ஏடுகளிலும் ஏனைய வரலாற்றுப் பதிவுகளிலும் காணப்படுகிறது என்பதன் மூலம் நாம் நுளம்புகளின் முக்கி யத்துவத்தை உணர்ந்து கொள்ளலாம். உலகிலேயே மிக முக்கியமாகக் கருதப் படும் ஒட்டுண்ணி நோயாக மலேரியா உள்ளது.

தினசரி 3 ஆயிரம் சிறுவர்களையும் ஒரு வருடத்தில் கிட்டத்தட்ட ஒரு மில்லியன் உயிர்களையும் காவுகொள்வதாகக் கூறப்படுகிறது.

இலங்கையில் 1946 ஆம் ஆண்டின் பின் மலேரியாவிற்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகள் காரணமாக இந்நோயின் பாதிப்பு பெருமளவில் குறைக்கப்பட்டது.

டெங்குக் காய்ச்சலானது குணங்குறிகளுடன் கூடிய நோய் நிலைமை கடந்த நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் பரவலாக அவதானிக்கப்பட்டாலும் 1962 ஆம் ஆண்டே முதன் முதலில் பிறபொருளெதிரி சோதனை மூலம் உறுதிப்படுத்தப்பட்டது.

யானைக்கால் நோயானது இலங்கையின் சிலாபம், புத்தளம், நீர்கொழும்பு, கொழும்பு,களுத்துறை, காலி,அம்பாந்தோட்டை மற்றும் குருநாகல் பிரதேசங்களில் அதிகளவில் காணப்படுகின்றது. இந்நோய்க்கு எதிரான செயற்றிட்டம் 2002 ஆம் ஆண்டு முதல் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக (1981 இல் 0.25% -0.38% ஆக காணப்பட்ட யானைக் கால் ஒட்டுண்ணி 2004 ஆம் ஆண்டு 0.05ஆகக் குறைக்கப்பட்டது) இந் நோயின் பரம்பல் பெருமளவு குறைக்கப்பட்டது.

1965 இல் சிக்குன்குனியா வைரஸின் தாக்கம் இனங்காணப்பட்டாலும் 2006ஆம் ஆண்டின் பிற்பகுதியிலேயே மிகப் பெருமளவான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

இவ்வாண்டின் ஆரம்பப் பகுதியில் இது இரத்தினபுரி மாவட்டம் உள்ளிட்ட பகுதிகளில் தனது வருகையை பதிவுசெய்துள்ளதை அறியக்கூடியதாக இருக்கிறது. நுளம்பினாற் பரப்பப்படும் இந் நோய்கள் யாவற்றிலும் ஓர் பொதுவான அறிகுறியாக காய்ச்சல் காணப்படுகிது.

**மலேரியா**

மலேரியாவின் தாக்கத்தினால் குளிர் நடுக்கத்துடன் கூடிய காய்ச்சல் -அதிகமாக மதிய வேளைகளில் ஏற்படும். இது ஒன்று விட்ட ஒருநாள் அல்லது இருநாட்களுக்கு ஒரு தடவை ஏற்படும். இடைவிட்ட காய்ச்சலாக காணப்படும். அத்துடன் தலையிடி,தசைகளில் வலி, உணவில்நாட்டமின்மைபோன்றஅறிகுறிகள் ஏற்படலாம். நோயின் வீரியத்திற்கேற்ப ஈரல்,மண்ணீரலில் வீக்கமும் ஏற்படலாம்.

தொற்று கடுமையாகக் காணப்படும் போது மூளை மலேரியா,குருதிச்சோகை, அடிக்கடி வலிப்பு, ஈரல், சிறுநீரகம், மண்ணீரல் போன்ற அங்கங்களின் தொழிற்பாட்டுக் குறைபாடுகளும் கர்ப்ப காலத்தில் தாயின் இறப்பு, குழந்தை கர்ப்பத்தில் அழிவ டைதல், குழந்தை இறந்து பிறத்தல்,முற்றாக வளர்ச்சியடையாத நிறைகுறைந்த குழந்தைகள் பிறத்தல் போன்ற நிலைமைகள் ஏற்படலாம்.

**டெங்கு காய்ச்சல்**

டெங்குக் காய்ச்சலுக்கு இலக்கான நோயாளிகளில் கடுமையான தலையிடியுடன் கூடிய தொடர்ச்சியான காய்ச்சல், மூட்டுகளில் வலி, உடற்பகுதிகளில் செந்நிற அடையாளங்கள், முரசு, மூக்கு வழியாக அசாதாரண குருதி வெளியேற்றம்,வாந்தி / மலத்துடன் குருதி வெளியேற்றம் போன்ற அறிகுறிகள் ஏற்படலாம். இந்நோயின் உக்கிரத்தால் இறப்பு, மூளை யழற்சி, அதிகளவான இரத்துப்பெருக்கு, சுய நினைவிழப்பு போன்ற நிலைமைகள் ஏற்பட லாம்.

**மிக விரைவில் எதிர்பாருங்கள்...**

**ஓர் அரிய ஒலி-ஒளி இறுவட்டாக**
**ஓர் ஆவணச் சித்திரமாக, காலத்தின் பதிவாக**
**❖ நுளம்புகளால் பரப்பப்படும் பிரதான நோய்கள் பற்றிய விளக்கத்துடனும்**
**❖ நுளம்புத் தொல்லையிலிருந்து விடுபடும் வழிமுறைகளுடனும் வெளியிடப்படவுள்ளது.**
**வெளியீடு : மருத்துவபீட மாணவர்கள் (26ஆம் அணி, குழுIV )**

**யானைக்கால் நோய்**

யானைக்கால் நோயின் நோய்க்காரணியானது நிணநீர்த் தொகுதியுள்ளும் நிணநீர்க் கணுக்களினுள்ளும் காணப்பட்டு நிணநீர் சுற்றோட்டத்தை தடைசெய்வதால் நிணநீர்க்கால், நிணநீர் கணுக்களில் வீக்கம் ஏற்படும். நிணநீர்க்கான்களின் அடைப்பினால் அதன் கீழுள்ள பகுதிகள் வீங்கி நாளடைவில் இவ்வீக்கம் மீளமுடியாதுள்ள தாக மாறிவிடும். பொதுவாக கால்கள் பாதிப்படைந்து இவ்வாறு வீக்கம் ஏற்படுவதாலேயே யானைக்கால் என அழைப்பர். இருப்பினும் ஆண்குறி, பெண்குறி, விதைப்பை, மார்பு, கை போன்ற பகுதிகளும் பாதிப்படையலாம்.

இந்நோயை கட்டுப்படுத்தத் தவறின் விதைவீக்கம், பால்போன்று சிறுநீர் வெளியேறல், மூட்டுவாதம் போன்ற நிலைமைகள் ஏற்படலாம். இவ் நுண்ணுயிர்கள் நிணநீர் சுற்றோட்டத்தை தடைசெயவதால் நிர்ப்பீடனம் தொடர்பான பாதிப்புக்கள் ஏற்படலாம்.

**சிக்குன்குனியா**

சிக்குன்குனியா நோயாளிகளில் தொடர்ச்சியான காய்ச்சல் காணப்படும். இதன்போது, உடல்வெப்பநிலை 39°C இற்கு மேலாக அதிகரித்துக் காணப்படுவதுடன் கடுமையான



யானைக்கால் நோய்

தலையிடியும் ஏற்படலாம்.மூட்டுநோ ஏற்பட்டு படிப்படியாக அவை வீக்கமுற்று கை,கால் போன்ற அங்கங்களை அசைக்கமுடியாத தன்மை, முகத்தில் புள்ளிகள்,விதைப்பை அக்குள் பகுதிகளில் புண்கள், தோலில் நிற மாற்றம் போன்ற அறிகுறிகள் ஏற்படலாம்.

இந்நோயின் உக்கிரம் அதிகரித்தால் வயிற்றுப்புண், மூட்டுகளில் வீக்கம் பிடிப்பு நோ என்பன ஒருவருட காலம் வரை நீடிக்க லாம். ஏற்கனவே இதய,சிறுநீரக ஈரல் சம்பந்தமான நோய் உடையவர்களில் இந்நோய் தீவிரமடைந்து மரணம் சம்பவிக்கலாம்.

**யப்பனிய மூளைக்காய்ச்சல்**

ஜப்பானிய முளைக்காய்ச்சல் ஆபோ வைரசுகளின் தொற்றுகைக்குட்பட்ட கியுலெக்ஸ் சாதி நுளம்புகளினூடாகவே மனிதனை அடைகின்றது.


இத் தொற்றடைந்த நோயாளிகளில் பெரும்பாலானோர் மிகக் குறைந்தளவில் அறிகுறிகளான காய்ச்சல் தலைவலியை வெளிக்காட்டுகின்றனர். இவ் வைரசுகள் நரம்புக்கலங்களை அதிகமாக தாக்குவதால் பல பக்கவிளைவுகள் ஏற்படுகின்றன. காய்ச்சலுடன் கழுத்துவலி, வலிப்பு, எரிச்சல் உண்டாதல், உணர்விழத்தல்போன்ற அறிகுறிகளும் ஏற்படலாம்.

இதன் உக்கிரமான தொற்றலினால் திடீர் தலைவலி, பொதுவான உடல் இயலாமை அல்லது செயலிழப்பு, மண்டையோட்டு நரம்புகள் செயலிழத்தல், மூச்சுத்திணறல், நடைதள்ளாட்டம் , பேசமுடியாமை போன்ற சிக்கல் நிலை மைகள் ஏற்படலாம். மூளையில் இந்நோய் வைரசுகளின் தொற்று ஏற்பட்டால் மிக ஆபத்தான சமயத்தில் இறப்பு கூட ஏற்படலாம். (தொடரும்)

# மானிப்பாய் -சுதுமலை
# ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான
# தேர்த் திருவிழாச் சிறப்பு மலர் -18.05.2008

## சர்வதேச இந்துமத குரு பீடாதிபதியின் ஆசிச்செய்தி

### எங்குமே சக்திமயம்




'யாதேவீ சர்வபூதேஷு சக்திரூபேண ஸம்ஸ்த்திதா நமஸ்தஸ்யை நமஸ் தஸ்யை நமோ நமஹ' (தேவி மஹாத்மியம்)

அண்டசராசரங்களின் அனைத்து ஜீவ ராசிகளின் உற்பத்திக்கும் தாயாக விளங்குபவள் சக்தியே ஆகும். தாயின் சிறப்புக்கும் பெருமைக்கும் அன்புக்கும் நிகரே கிடையாது. இச் சக்திஆகிய அம்பிகையே பல்வேறு வடிவங்களில் உபாசிக்கப்படுகிறாள். எமது ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளும் கண்ணகையாக, பர்வபத்தினியாக மனோன்மணியாக போற்றப்பட்டு கைலாச கிரியில் சிவன் வீற்றிருப்பது போன்று சுதுகிரியில் சுதுமலை என்னும் கிராமத்தில் தற்போது புவனேஸ்வரி அம்பிகையாக மூர்த்தி நாமம் பெற்று அர்ச்சிக்கப் பெற்று அருளாட்சி செய்து வருகிறாள். தொன்று தொட்டு நிலவிவரும் பழமையையும் ஐதீகத்தையும் நம்பிக்கையையும் புலப்படுத்தி நிற்கும் தேர்ப் பொங்கலும் சுளகு மடைப் படைப்பும். பறை சாற்றும் வாத்தியத்துடன் அம்பிகை தேரில் ஆரோஹணிப்பதும் வேறெங்கும் காணமுடியாத சிறப்பாகும்.

தன்னை நாடிவரும் அடியார்களுக்கு வேண்டுவதே சிறப்பாகக் கொடுக்கும் தன்னிகரில்லா நாயகியாக எமது ஸ்ரீமாதா புவனாம்பாள் அடியார்களை ரட்ஷிக்கிறாள். இன்று சிருங்கார நாயகியாகவும் ஸர்வ அலங்கார பூஷணியாகவும் தேரேறிவரும் அன்னை ஸ்ரீபுவனேஸ்வரி உங்கள் அனைவருக்கும் அனைத்து ஐஸ்வர்யங்களையும் தருவதோடு ஆனந்தப் பெருவாழ்வையும் இந்நாட்டில் நிரந்தர சமாதானத்தையும் தர வேண்டும் என அவள் பாதகமலம் வேண்டி ஆசிகூறுகிறேன்.

ஸமஸ்த ஸந் மங்களானி பவந்து

சிவஸ்ரீ.ச.மகேஸ்வரக்குருக்கள்
பிரதம குரு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம், சுதுமலை.



## மூர்த்தி ,தலம்,தீர்த்தம் சிறப்புமிகு பழமை வாய்ந்த ஆலயம்

யாழ்ப்பாண நகரின் வட பால் நான்கு மைல் தூரத்தில் உள்ளது சுதுமலை. இதனை சுதுவையம்பதி, சுதுவை நகர், சுதுகிரி என்றும் அழைப்பதுண்டு. குளம் சூழ்ந்த வயல்களும் வான்பயிர்களும் செய்பயிர்களும் வேம்பு, அரசு, ஆல், மகிழ், மருது,கடம்பு போன்ற சோலை விருட்சங்களும் இக் கிராமத்தை அழகுபடுத்துகின்றன. இக்கிராமத்தின் மையத்திலே ஆகம விதிகளுக்கமைய கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மாகாமண்டபம், தரிசன மண்டபம், ஸ்தம்பமண்டபம், இராஜகோபுரம் ஆகியவற்றுடன் புவனேஸ்வரி அம்மை அருள் பாலித்து வருகின்றாள். இவ் ஆலயத்தைச் சூழ சிவன்கோவில், முருகன் கோவில், வைரவர் கோயில் ஆகியனவும் அமைந்து அழகு செய்கின்றன. பழமை வாய்ந்த இந்த ஆலயம் 1775 ஆம் ஆண்டு மண்ணால் கட்டப்பட்டதாகவும் 1822ஆம் ஆண்டு கல்லால் கட்டப்பட்டது எனவும் யாழ்ப்பாண கச்சேரிப்பதிவுகள் கூறுகின்றன. இக்காலத்தில் இவ் ஆலயம் பர்வதவர்த்தனி அம்மன் கோயில் என்று அழைக்கப்பட்டதாகவும் அறிய முடிகிறது. கண்ணகித் தெய்வம் மதுரை மாநகரை அழித்து அவ்வேகத்துடன் ஈழம் நோக்கி நவாலிகளுவோடை ஊடாக இங்கு வந்து தங்கியதாகக் கருதப்படுகிறது. இதனால் தங்கு சங்களை எனவும் அழைக்கப்படுகிறது.

கண்ணகி வழிபாட்டைப் போற்றி கண்ணகிக்கு விழா எடுத்து வரும் சமயம் இவ்வூர் அன்பரான கதிர்காமர் வேலாயுதர் எனும் அடியவர் தனது வயலில் உச்சி வேளையில் உழுது கொண்டு நிற்கும் சமயம் பால் போல் நிறமுள்ள நரைத்த மயிர், தொளதொளஉடல், வெண்ணிற ஆடை, அணிந்தவராக மூதாட்டி ஒருவர் சோலைகள் நடுமத்தியிலே நிற்பதை அவதானித்தார்.

உழுது கொண்டு நின்றவர் அம் மூதாட்டியிடம் சென்றார் அம் மூதாட்டி தனக்கு தாகம் அதிகம் எனவும் குடிப்பதற்கு நீர் தேவை எனவும் கூறினார். சிறிது நேரம் தங்கும் படி கூறிவிட்டு தனது வீட்டிற்குச் சென்று இளநீருடன் வந்து பார்த்த போது, மூதாட்டியைக் காணவில்லை. எங்கும் தேடிக் காணாது மனம் சோர்ந்தார். அன்றிரவே அம்பாள் காட்சி கொடுத்து என்னை இவ் விடத்தில் வைத்து ஆதரிக்கும்படி ஆஞ்சையிட்டு மறைந்தருளினார். அம்பாள் தோற்றமளித்த இடத்தில் அம்பாளை வழிபட்டு வைகாசி மாதத்தில் பொங்கல், குளிர்த்தி,சுளகு மடைபடையல் போன்ற நிவேதனப் பொருட்களை வைத்து தேவி வழிபாடு செய்து வந்தனர்.

தர்மகர்த்தா சபையினர்.

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



யாழ்ப்பாணம் சுதுமலைப் பதியில் எழுந்தருளி இருந்து அருளாட்சி புரியும் புவனேஸ்வரி அம்பிகை இன்று தேர் ஏறி அருட்காட்சி தருவது அனைவருக்கும் மகிழ்ச்சியை தருகின்றது. உலக மாதாவாகிய அன்னை இவ்வாலயத்தில் வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பொருட்டு புவனேஸ்வரி அம்பிகையாக வீற்றிருக்கின்றாள். பழைமையும் புதுமையும் வாய்ந்த இவ்வாலயம் இயற்கை அழகும் பல அற்புதங்களையும் கொண்டுள்ளது.

ஆன்ம விடுதலையின் பொருட்டு மனிதனாக பிறந்த உயிர் அனைத்தும் இறைவன் பால் அன்பு கொள்கின்றன. இதை நிலை நிறுத்தும் பொருட்டு அஞ்ஞான இருளை நீங்கி மெஞ்ஞான ஒளியை ஏற்றுவதே தேர்த்திருவிழாவாகும். இதனாலேயே 'வடம் பிடித்தால் வானத்தில் இடம்பிடிக்கலாம்' என நம் சமயம் போற்றுகின்றது. இன்று தேர் ஏறும் அம்பிகையை அனைவரும் வழிபாடு செய்து மன அமைதியோடும் இறை சிந்தனையோடும் வாழ்வோமாக! என்றும் அமைதியும் சந்தோஷமும் நிலவி அம்பிகையை பிரார்த்திப்போமாக!

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஆதீன முதல்வர்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.

## அம்பிகையின் கடைக்கண் பார்வை ஒன்றே போதும்



இன்றைக்கு ஐந்நூறு வருடங்கள் பழமையும், புதுமையும், சேரப்பெற்றதும், மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பவற்றை தன்னகத்தே கொண்டமையப் பெற்றதும் உலகிற்குத் தாயாகவும் பூமிக்கு ஈஸ்வரியாகவும் விளங்கும் எமது குல தெய்வம் ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாளுக்கு வெகு சிறப்பாக இன்று தேர்த்திருவிழா நடைபெறுகின்றது.

எமது அம்பாளை நோக்கி வரும் அடியார்களின் கூட்டம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகின்றது. சக்தியின் அருளையும் அற்புதங்களையும் அனுபவங்கள் ஊடாகவே நாமெல்லாம் உணரக் கூடியதாகவுள்ளது. எமது கிராமத்தின் நடு நாயகியாக வானுயர்ந்த அழகிய ராஜகோபுர அமைப்பும், முறைப்படி அமைக்கப் பெற்ற ஆலய அமைப்பும், இயற்கைச் சூழலும் அம்பாளின் திருவருளாகவே காட்சியளிக்கின்றன. நடைபெற்று வரும் திருப்பணி வேலைகளும் அவள் செயலாகவே அமைகின்றன.குறிப்பாக கடந்த ஐந்தாண்டு காலமாக ஒவ்வொரு வருடமும் நன்கு திட்டமிட்ட திருப் பணிகள் நிறை வேறி வருகின்றன. சிறப்பாக 2004இல் அம்பிகைக்கு பெரிய சப்பறம் அமைக்கப்பட்டது. 2005இல் கல்யாண மண்டபம் நிர்மாணிக்கப்பட்டது. 2006இல் திருக்கேணி புனரமைக்கப்பட்டு தீர்த்தக் கேணியாக அழகு படுத்தப்பட்டது. 2007இல் விநாயகருக்கு சித்திரத்தேர் இழுக்கப்பட்டது. இம் முறையும் (2008)பிரத்தியேகமான அன்னதான மண்டபம் புதிதாகக் கட்டப்பட்டிருக்கின்றது.

இனிவரும் காலங்களிலும் முருகனுக்கு புதிய தேர், அம்பிகைக்கு கைலாசவாகனம், மஞ்சம், தென்வாசலில் ராஜகோபுரம் என்பன அமைய வேண்டிய திருப்பணிகளாகவுள்ளன. மூன்று வருடங்களின் பின்பு பாலஸ்தாபன மஹா கும்பாபிஷேகம் செய்ய வேண்டிய பாரிய திருப்பணிகள் இருக்கின்றன. அம்பாளின் ஆலயத்தை இலங்கையின் முதன் நிலை சக்தி ஆலயமாகவும் முன்னோடி ஆலயமாகவும் சிறப்பு மிக்க ஆலயமாகவும் கொண்டு வரவேண்டிய பொறுப்பு அடியார்கள் யாவருக்கும் உரியதாகும். இக் கைங்கரியத்திற்கு எல்லா அடியார்களும் தம்மாலியன்ற பங்களிப்பு செய்ய வேண்டும் என கேட்பதோடு உங்கள் அனைவருக்கும் சகல செல்வங்களும் சௌபாக்கியங்களும் கிடைக்க வேண்டும் என இன்று சர்வ அலங்கார ரூபினியாக தேரேறிவரும் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளை வணங்கி வேண்டிக் கொள்கின்றேன்.

கு.கணேசதாசன் (J.P)
சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான பரம்பரை அறங்காவலர், தர்மகர்த்தா சபைத் தலைவர்.

## செஞ்சொற்செல்வரின் வாழ்த்து



ஆதி பரம் பொருளின் ஊக்கம்
அதை அன்னை எனப்பணிதல் ஆக்கம்
மூலப்பழம் பொருளின் நாட்டம்
இந்த மூன்று புவியும் உவது ஆட்டம்(பாரதியார்)

எல்லா உயிர்களையும் தாங்கும் இனிய அன்னை புவனேஸ்வரி அருள் நிறைந்த சுதுமலைத் திருவூரில் அற்புத நாயகியாகக் குடிகொண்டு விளங்கும் அன்னை தேர் ஏறிவரும் திருநாள் சிறப்பினை சொல்லில் வடிக்க முடியாது. பாரம்பரிய கிராமிய வழிபாட்டு மரபில் களங்கில் சோறு படைத்து நிரை நிரையாக மடை வைத்து காத்திருக்கும் அடியவர்கள் ஒருபக்கம், 'அம்மா தாயே! நீயே கதி! எனக் கூறி ஓவை எழுப்பிய வண்ணம் பெரு வீதி முழுவதும் பிரதட்டை உருளும் பக்தர் ஒருபக்கம், அடியளித்த வண்ணம் தேரின் பின்னே வரும் ஆயிரம் ஆயிரம் பெண்கள் ஒரு பக்கம் என்ற நிலையில் பக்தி வெள்ளத்தில் பராசக்தியின் தேர் வீதியுலா வரும் காட்சியைக்கண்டு களிக்கும் நன்நாள் இன்றாகும். வேட்கும் வரம் நல்கி அச்சம் விட்டு அஞ்சேல் என அழைக்கும் சுதுமலை அம்பாளின் புண்ணியத் திருநாளில் ஒன்று கூடி யாவரும் அனைவரும் திருவருளைப் பெற்று தேவி திருவருளால் நல்லன நாளும் காண்போம். அம்பாளின் அற்புதத்தேர் பவனியோடு அகிலம் அறுதல் பெற இறைஞ்சி வாழ்த்தி அமைகிறேன்.

ஆறு திருமுருகன்.

## தேரேறி வருகிறாள் தேவி

தேரேறி வருகின்றாள் தேவி புவனேஸ்வரியாள்
தேசத்தின் துயரத்தை தீர்த்திட வருகிறாள்
பாரேந்தும் பைந்தோகை சமாதானம் தழைத்திட
பொன்னான சித்திரத் தேரேறி வருகிறாள்!

பண்டிதர் க.ஈஸ்வரநாதபிள்ளை

### தேர்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்

ரஞ்சிதா வைத்தியசாலை
சுதுமலை மத்தி, மானிப்பாய்
எமது வைத்தியசாலையில் சகல நோய்களுக்கும் சிகிச்சை பெறலாம். எமது வைத்தியசாலையில் ஒவ்வொரு ஞாயிறும் மாலை இரண்டுமணிக்கு சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் ஜெயரட்ணம் வருகை தருவார்.
ஒவ்வொரு ஞாயிறும் காலை 71/2 மணிக்கு மகப்பேற்று நிபுணர் டாக்டர் ஸ்ரீதரன் வருகை தருவார்.
தினமும் மாலை 4 மணிக்கு கண், பல் சிகிச்சை நடைபெறும். மற்றும் பெண்களுக்கு (FEPIAL) செய்யப்படும் எமது கிளைஸ்தாபனம் டச்சு வீதி உடுவில்,இந்திர அம்மன் கோவிலடி துன்னாலையிலும் இயங்குகிறது என்பதை எமது நோயாளர்களுக்கு தெரியப்படுத்துகிறோம்

PC SYSTEMS
Total IT Solution Providers
Aladi Junction,
Jaffna Road. Manipay, Jaffna,
Sri Lanka
Tel:-0094 21 4591525 / 0094 21 4591142

யோய்ஸ் மருந்தகம்
ஆங்கில மருந்து விற்பனையாளர்
இலங்கை வங்கி முன்பாக
யாழ்.வீதி, மானிப்பாய்.

அனைத்து ஆடைத் திணிசுகளையும் எண்ணம்போல் தெரிவு செய்திட
விநாயகர் பட்டுச்சோலை
அரசடிச் சந்தி,மானிப்பாய்.

ஆங்கில மருந்து வகைகள், பால்மா, பிஸ்கற் வகைகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள
குறிஞ்சி பார்மசி
திருநெல்வேலிச் சந்தி, யாழ்ப்பாணம்.

மோட்டார் சைக்கிள், துவிச்சக்கரவண்டி, வாட்டர்பம், ஆட்டோ உதிரிப்பாகங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள.
ஐங்கரன் மோட்டோஸ்
Market view. Manipay
T.P:-0214591568.

சகல விதமான வீடியோ ஓடியோ றெக்கோடிங் சேவை வாடகைச் சேவை போன்றவற்றிற்கு
சுகிர் வீடியோ
சுதுமலை மத்தி மானிப்பாய்.

V.S.M ஸ்ரோர்ஸ்
ஆலடிச் சந்தி , மானிப்பாய்.

சுதர்சன்
பிரதானவீதி, மானிப்பாய்.

கயானி காலணியகம்
ஆலடிச் சந்தி, மானிப்பாய்.

நாளுக்கு நாள் மாறும் நவநாக தங்க ஆபரணங்களை எண்ணம்போல் தெரிவு செய்திட
பிறேம் நகை மாடம்
171,பிறேம் பிளாஸா யாழ்.வீதி. மானிப்பாய்.

லிங்கம் ஸ்ரோர்ஸ் & லிங்கம் ஹோட்டல்
பல்பொருள் விற்பனை வாணிபம்.
மலைவேம்படி, சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

# வலுப்பெறும் தாக்குதல்களும்

கிழக்கு மாகாணத்தில் நடத்தப்பட்ட தேர்தல் 'குளிக்கப்போய் சேறுபூசிக் கொண்டு வந்த கதையாக' மாறிவிட்டது. சர்வதேச சமூகத்தையும் முதலீட்டாளர்களையும் கவர்ந்திழுப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட இந்தத் தேர்தலின் போது நடைபெற்ற வன்முறைகள் சர்வதேச சமூகத்தை விசனமடையச் செய்துள்ளதாகவே நோக்கப்படுகின்றது. சர்வதேச சமூகத்தின் கதாநாயகனாக விளங்கும் அமெரிக்க அரசின் கவலை தோய்ந்த அறிக்கை அதற்கு ஆதாரமாக உள்ளது.

அதுமட்டுமல்லாது இந்தத் தேர்தல் நடைபெற்ற முறை தொடர்பாக உள்ளூரிலும் பெரும் எதிர்ப்புக்கள் தோன்றியுள்ளன. தவிர வெற்றி பெற்ற அரச கூட்டணிக்குள்ளும் பதவிப் போட்டி தலைதூக்கியுள்ளது. கிழக்கில் நடைபெற்ற தேர்தல் நீதியானதும் நேர்மையானதும் அல்ல என பல அரசியல் கட்சி களும் அமைப்புக்களும் தெரிவித்துவரும் நிலையில் அங்கு புதிதாக வன்முறைகள் உருவாகலாம் என்ற கவலை அமெரிக்காவிற்கு தோன்றியுள்ளது எனவும் மக்கள் தமக்கு விருப்பமான நிர்வாகத்தை தேர்ந்தெடுக்க முடியாததே அதற்குக் காரணம் எனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தேர்தல் ஏற்படுத்தி உள்ள குழப்பமான நிலைகளுக்கு மத்தியில் கிழக்கிலங்கையில் விடுதலைப்புலிகளின் தாக்குதல்கள் வலுப்பெற்று வருவதும் கிழக்கு நோக்கிய உலகின் கவனத்தை மேலும் கூர்மையாக்கியுள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் கஞ்சிகுடிச்சாற்றுப்பகுதியில் 2007ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சிறப்பு அதிரடிப்படையினர் மேற்கொண்ட நிச்சயமான வெற்றி (Operation Definite Victory) படை நடவடிக்கை வெற்றிபெறாததும் விடுதலைப்புலிகள் தமது நடவடிக்கைகளை முற்றாக ஒரு கெரில்லா நடவடிக்கையாக மாற்றியமைத்ததும் கிழக்கில் தற்போது உக்கிரமடைந்துவரும் தாக்குதல்களுக்குக் காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

> **வான்புலிகளின் தொடர் தாக்குதல்களை தொடர்ந்து தனது பொருளாதார வளங்களை வான்பாதுகாப்புக்கு அதிக அளவில் செலவிட்டு வரும் அரசுக்கு இனிவரும் காலங்களில் கடலடி பாதுகாப்பு பொறிமுறைகளுக்கு பெருமளவான நிதியினை ஒதுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.**

இந்தத்தாக்குதல்கள் தென்னிலங்கை வரை ஆழமாகப் பரவியதுடன் விடுதலைப் புலிகளின் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் 15பேர் அடங்கிய ஒரு பிரிவு அம்பாந்தோட்டை, மொனாராகல மாவட்டங்கள் வரை ஊடுருவி உள்ளதாக கூறப்படுகிறது.

மாகாண சபைத் தேர்தலுக்குமுன்னர் திருமலை மாவட்டத்தின் பேராறு காட்டுப்பகுதி ஊடாக நகர்ந்த விடுதலைப்புலிகளின் அணி ஒன்றை படையினர் எதிர்கொண்டபோது மோதல் ஏற்பட்டதாக படைத்தரப்பு தெரிவித்திருந்தநிலையில் அம்பாறை மாவட்டத்தில் வெடித்த குண்டும் பெரும் பதற்றத்தையும் தோற்றுவித்திருந்தது. எனினும் தேர்தல் காலத்தில் வெடித்த இந்தக் குண்டு அரசியல் கட்சிகளுக்கு இடையிலான மோதல்களின் வெளிப்பாடாகவும் இருக்கலாம் எனவும் அம்பாறைத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

மேலும் தேர்தல் ஆரம்பிப்பதற்கு ஐந்து மணி நேரத்திற்கு முன்னர் இலங்கையில் கேந்திர முக்கியத்துவம் மிக்க இயற்கைத்துறைமுகமான திருமலைத் துறைமுகத்தில் இடம் பெற்ற குண்டுவெடிப்பு கிழக்கு பிராந்தியக் கடற்படைத் தலைமையகத்தை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

அதிகாலை 2.15மணியளவில் கடற்படையினரின் வலிமைமிக்க கிழக்கு பிராந்திய கட்டளைத் தலைமையகத்திற்கு அருகாமையில் அமைந்திருந்த வர்த்தக துறைமுகமான சீனன்குடா துறைமுகத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஏ -520 இலக்கமுடைய எம்.வி. இன்வின்சிபிள் (MV.Invincible) என்ற விநியோகக் கப்பல் பெரும் வெடிப்பதிர்வுடன் தீப்பற்றிக்கொண்டது. இது வான் தாக்குதல் என எண்ணிய துறைமுகத்தின் பாதுகாப்புக்கு பொறுப்பாக இருந்த கடற்படையினர் வானத்தை நோக்கி தமது இலகுரக மற்றும் கனரக இயந்திரத் துப்பாக்கிகளை தயார்ப்படுத்திய போதும் பின்னர் அது வான்புலிகளின் தாக்குதல் அல்ல என்ற உண்மையை உணர்ந்து கொண்டனர். கடந்த ஆண்டு அரசின் முக்கிய பொருளாதார படைத்துறை கட்டமைப்புக்களை வான்புலிகள் தாக்கிய பின்னர் திரு மலைத் துறைமுகத்தின் பாதுகாப்பை அரசு பல மடங்கு அதிகரித்திருந்தது. அங்கு வான் எதிர்ப்பு பொறிமுறைகளும் அதிகரிக்கப்பட்டிருந்தன. இலகு ரக விமான எதிர்ப்பு பீரங்கிகள் மற்றும் கனரக துப்பாக்கிகள் என்பன அதிகளவில் நிறுவப்பட்டிருந்தன.

மேலும் விடுதலைப்புலிகளின் நீரடி நீச்சல் பிரிவினர் துறைமுகத்திற்குள் ஊடுருவுவதை தடை செய்யும் முகமாக கப்பல்கள் உட்சென்று வெளியேறும் வாயில்கள் தவிர ஏனைய பகுதிகளில் ஒரு குறிப்பிட்ட ஆழம் வரையிலும் இரும்பு வலைகள் அமைக்கப்பட்டு பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டிருந்தன.

மேலும் நீருக்கடியில் நகரும் வெடிகுண்டு பொருத்தப்பட்ட நீரடி நீச்சல் பிரிவினரின் குண்டுகள் இலக்கை அடையும் முன்னர் வெடித்துச் சிதறும் வண்ணம் எழுந்தமானமாக நீருக்கடியில் சென்று வெடிக்கும் டொபிட்டோகளும் கடற்படையினரால் பயன்படுத்தப்படுவதுடன் பல படகுகளில் துறைமுகத்தின் உட் பகுதிகளும் வெளிப்புறமும் தொடர்ச்சியாக தேடுதல்களுக்கு உட்படுத்தப்படுவதுண்டு.

> **தேர்தல் ஏற்படுத்தி உள்ள குழப்பமான நிலைகளுக்கு மத்தியில் கிழக்கிலங்கையில் விடுதலைப்புலிகளின் தாக்குதல்கள் வலுப்பெற்று வருவதும் கிழக்கு நோக்கிய உலகின் கவனத்தை மேலும் கூர்மையாக்கியுள்ளது.**

மூன்றாம் கட்ட ஈழப்போரின் ஆரம்பத்தில் கடற்படையினரின் பீரங்கிக் கப்பல்களான

# கிழக்கின் புதிய நெருக்கடிகளும்

ரணசுறு, சூரையா ஆகிய கப்பல்களும் அதன்பின்னர் டோறா அதிவேக தாக்குதல் கலம் மற்றும் விநியோகக் கப்பல்கள் என்பன திருமலைத்துறைமுகத்தினுள் வைத்து தாக்குதலுக்கு உள்ளாகின. அதனைத்தொடர்ந்து திருமலைத் துறைமுகத்தின் நீருக்கடியிலான பாதுகாப்புக்கள் அதிகரிக்கப்பட்டிருந்தன.

கிழக்கு மீதான படை நடவடிக்கையின் முக்கிய நோக்கமும் திருமலை துறைமுகத்தை மையமாக கொண்டதாகவே இருந்தது. வட பகுதியில் முடங்கிப் போயுள்ள பெரும் இராணுவ இயந்திரத்தின் முக்கிய விநியோக மையமான திருமலையின் பாதுகாப்பை உறுதி செய்வதே அந்தப் படை நடவடிக்கையின் பிரதான நோக்கமாகும்.

இலங்கைத் தீவின் ' ஆயிரத்து 700 கிலோமீற்றர் நீளமான கடற்கரை பிரதேசத்தையும் நடைபெறும் போரில் அதன் முக்கியத்துவத்தையும் கருதி இலங்கையைச் சூழ 5



பயிற்சியில் ஈடுபடும் கடற்கரும்புலிகளின் நீச்சல் பிரிவினர்

கட்டளை பீடங்களை கடற்படை அமைத்துள்ளபோதும் இவற்றில் திருமலை நிலாவெளி, திரியாய் தளங்களை உள்ளடக்கிய கிழக்கு கட்டளைபீடம் முக்கியமான தாகவே நோக்கப்படுகிறது.

மோதல் நடைபெறும் களமுனைகளுக்கு படையினரையும் விநியோகங்களையும் நகர்த்துதல் விடுதலைப் புலிகளின் விநியோக வழிகளை தடுத்தல் என்பவற்றில் அதன் முக்கியத்துவம் அதிகமானது. மேலும் சம்பூர் அனல் மின் நிலையம் அமைக்கும் அரசின் திட்டத்திற்கு வலுச்சேர்ப்பதும் இந்தத் துறைமுகம்தான். அதாவது இந்தத் துறைமுகத்தின் வர்த்தகப் பயன்பாட்டில்தான் அனல் மின் நிலையத்திற்கான முதலீட்டாளர்களின் ஆர்வம் தங்கியுள்ளது. இந்தத்தாக்குதலின் படைத்துறை தாக்கங்களை பொறுத்தவரையில் கடற்படை தன்னி டம் இருந்த மூன்று விநியோகக் கப்பல்களில் ஒன்றை இழந்துள்ளது. கடற்படையிடம் பி - 715, ஏ-520, ஏ-521 ஆகிய விநியோகக் கப்பல்களும் (Auxiliary Vessels) ஏ-540, ஏ-542, ஏ-543 ஆகிய இலக்கங்களைக் கொண்ட துருப்புக்காவி கப்பல்களும் தற்போது சேவையில் உள்ளன. இவற்றில் ஏ-520 விநியோகக் கப்பல் கடந்த வாரம் நடைபெற்ற தாக்குதலில் மூழ்கிப் போயுள்ளது.

துருப்புக்காவி கப்பல்களில் பெரும்பாலானவை வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ள கப்பலாகும் என்பதும் விநியோகக் கப்பல்கள் ஆழ்கடல்நடவடிக்கையில் (Blue Water Operation) ஈடுபடும் போர்க்கப்பல்கள் மற்றும் யாழ். குடாநாட்டில் நிலை கொண்டுள்ள படையினருக்கான வழங்கல்களில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

விடுதலைப்புலிகளின் விநியோகக் கப்பல்களை முடக்கிவிட்டதாக கடற்படையினர் மேற்கொண்டு வந்த பிரசாரங்களுக்கு மத்தியில் கடந்த ஆண்டு டிசம்பர் 26ஆம் திகதி மன்னார் கடலில் இழக்கப்பட்ட டோறா அதிவேகத் தாக்குதல் படகிற்கு பின்னரான கடந்த ஆறுமாத காலப் பகுதியில் ஒரு கப்பலையும், மூன்று தாக்குதல் படகுகளையும் அவர்கள் இழந்துள்ளனர்.

இந்தக் காலப்பகுதியில் இரு டோறா பீரங்கிப் படகுகள்(பி-438, பி-413) ஒரு நீரூந்து விசைப்படகு ஒரு விநியோகக் கப்பல் என்பவற்றை கடற்படை இழந்துள்ளது.

திருமலையில் கடற்கரும்புலித்தாக்குதலில் படகு மூழ்கடிக்கப்பட்டுள்ளதாக கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளபோதும் 3ஆயிரத்து 200 தொன் சுமையைக் கொண்டு செல்லும் 83 மீற்றர் நீளமான இந்தக் கப்பல் மிகவும் விரைவாக மூழ்கிப்போனது. தாக்குதல் நடத்தப்பட்ட முறை தொடர்பாக சந்தேகங்களை தோற்றுவித்துள்ளது.

விடுதலைப்புலிகளின், கடற்புலிகளின் தளபதியாக விளங்கிய லெப்.கேணல் கங்கை அமரன் நீரடி நீச்சல் பிரிவினரே இந்தத் தாக்குதலை நடத்தியதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளபோதும், இந்த பத்தி எழுதப்படும் வரையிலும் அவர்கள் இந்த தாக்குதலில் உயிரிழந்த தமது கொமோண்டாக்களின் விபரங்களை அறி விக்காததும் அவதானிகள் மத்தியில் பலத்த எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

இந்தத் தாக்குதலானது நீருக்கடியில் பயணிக்கும் நீரடி நீச்சல் பிரிவினால் அல்லது நீருக்கு அடியில் பயணம் செய்யும் சிறிய கலங்களினால் நடத்தப்பட்டிருக்கலாம் என்ற கருத்துக்கள்தோன்றியுள்ள வேளையில் தாக்குதல் நடத்திய கடற் புலிகளின் சிறப்பு கொமாண்டோக்களோ அல்லது சிறிய கலமோ (Water scooter) வேறு ஒரு அதிவேக தாக்குதல் படகு மூலம் திருமலை துறைமுகத்தை அண்டிய பகுதிக்கு நகர்த்தப்பட் டிருக்க வேண்டும்.

ஏனெனில் அவை மட்டுப்படுத்தப்பட்ட அளவு நேரமே நீருக்கு அடியில் பயணிக்கும் தன்மை கொண்டவை. உதாரணமாக ஒரு அல்லது இரு மணி நேரமே கடலுக்கடியில் பயணிக்கக் கூடியது

அதனை உறுதி செய்வது போன்றே கடந்த வாரம் வெளியாகிய கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசையின் உரையும் அமைந்திருந்தது. அதாவது கடந்த 8ம் திகதி உயிரிழந்த கடற்புலிகளின் முக்கிய தளபதிகளில் ஒருவரான லெப்.கேணல் கடாபி என்பவரே திருமலைத் தாக்குததலை நடத்துவதற்கு உறுதுணை வழங்கிய அதிவேக தாக்குதல் கலத்தின் இயந்திரத்தை வடிவமைத்தவர் என கேணல் சூசை தெரிவித்திருந்ததும் குறிப்பிடத் தக்கது.

எனினும் நீருக்கடியில் பயணிக்கும் சிறிய கப்பல்கள் மூலம் தாக்குதல் நடத்தியதுக்கான தடயங்கள் எதுவுமில்லை என தெரிவித்துள்ள கடற்படையினர் தாக்குதலை நடத்திய கடற்புலிகள் கடவான பகுதியில் இருந்தே வந்திருக்க வேண்டும் என தெரிவித்துள்ளனர். ஆனால் பெரும் கப்பலின் வலிமை மிக்க அடிப்பகுதியில் அதிக சேதம் ஏற்படுத்திய இந்த குண்டு, காந்தப்புலம் மூலம் பொருத்தப்படும் குண்டாக இருக்க முடியாது எனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே அண்மையில் நடைபெற்ற இரு தாக்குதல்களும் நீருக்கடியில் மிகவும் மர்மமான முறையில் நிகழ்த்தப்பட்டுள்ளது படைத்தரப்பை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதி அதிகாலை 2.30 மணியளவில் திருமலைக்கு வடக்காக உள்ள நாயாறு கடற்பகுதியில் டோறா பீரங்கிப் படகின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலும் தற்போது விநியோக கப்பல் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலும் பல ஒற்றுமைகள் கொண்டுள்ளன.

இரண்டும் அதிகாலை வேளையில் நடத்தப்பட்டதுடன் இரு சந்தர்ப்பங்களிலும் நிலையாக நின்ற கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டுள்ளதாக படைத்துறை அவதானிகள் தெரிவித்துள்ளனர். இந்த இரு சந்தர்ப்பங்களிலும் ஆழ்கடலிலும் துறைமுகத்திலும் என வெவ்வேறு நிலையிடங்களில் நிறுத்தப்பட்டிருந்த இரு கப்பல்கள் தாக்குதலுக்கு உள்ளானது எந்தக்கள நிலையிலும் இலக்குகளைத் தாக்கி அழிக்கும் புதிய உத்தியை விடுதலைப் புலிகள் கொண்டுள்ளனரா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. படைத்தரப்பை பொறுத்த வரையில் இழக்கப்பட்ட விநியோகக் கப்பல் யாழ். குடாநாட்டிற்கான விநியோகங்களிலும் ஆழ்கடல் நடவடிக்கைகளிலும் கணிசமான பாதிப்புகளை ஏற்படுத்தலாம். மேலும் கடந்த இருமாதங்களில் விடுதலைப் புலிகள் 3கப்பல்களில் ஆயுதங்களை தருவித்துள்ளதாக படையினரின் புலனாய்வுத்துறை தெரிவித்துள்ள நிலையில் விநியோகக் கப்பல் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. படைத்துறை தாக்கங்களை விடுத்து இந்தத் தாக்குதல் ஏற்படுத்திய பொருளாதாரத் தாக்கங்களை கருதினால் கப்பல்களின் இழப்புக்கள் ஒருபுறமிருக்க, அதனால் ஏற்படும் நேரடியற்ற பொருளாதார இழப்புக்கள் கணிசமானவை. வர்த்தக கப்பல் மீது மேற்கொள்ளப்படும் இந்தத் தாக்குதல்கள் இலங்கைக்கு செல்லும் வர்த்தகக் கப்பல்களின் காப்புறுதித் தொகையை அதிகரிப்பதுடன் இலங்கையின் ஒட்டுமொத்த துறைமுகங்களும் ஆபத்து மிக்க பகுதிகளாகவும் தரப்படுத்தப்படலாம்.

எனவே நீண்ட பயணத்தின் பின்னரான ஓய்வுகள் மற்றும் எரிபொருள் தேவை கருதி இலங்கையை நாடும் கப்பல்கள் அதற்கு அண்மையாகவுள்ள வேறு நாடுகளை நாட முற்படலாம். இது இலங்கையின் ஏற்றுமதி வர்த்தகத்திலும் பெரும்பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடியது. மேலும் திருமலைத்துறைமுகத்தின் பாதுகாப்புக்களை நம்பி ஆரம்பிக்கப்படும் அனல் மின்நிலையத்தின் செயற்பாடுகளையும் இந்தத் தாக்குதல் கேள்விக் குறியாக்கியுள்ளது. அதாவது அனல் மின்நிலையத்திற்கு தேவையான எரிபொருட்களையும் உபகரணங்களையும் கொண்டுவருவதற்கும் திருமலைத்துறைமுகம் முக்கியமானது.

வான் புலிகளின் தொடர் தாக்குதல்களை தொடர்ந்து தனது பொருளாதார வளங்களை வான் பாதுகாப்புக்கு அதிகளவில் செலவிட்டு வரும் அரசுக்கு இனிவரும் காலங்களில் கடல் அடி பாதுகாப்பு பொறிமுறைகளுக்கு பெருமளவான நிதியினை ஒதுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. திருமலையில் ஆரம்பித்த இந்தத் தாக்குதலின் தொடர்ச்சியாக கடந்த சனிக்கிழமை (10) அம்பாறை மாவட்டத்தில் உள்ள பன்னல்கம பகுதியில் அமைந்திருந்த படை நிலைகளின் மீது விடுதலைப்புலிகள் 81மி.மீ எறிகணை தாக்குதலை நடத்தியிருந்தனர். இந்தக் கிராமத்தில் 18எறிகணைகள் வீழ்ந்து வெடித்துள்ளதாக படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

**வேல்ஸிலிருந்து அருஷ்**


ஏறத்தாழ 5கி.மீ. தூரவீச்சுக்கொண்ட 81 மி.மீ எறிகணைகளுடன் விடுதலைப்புலிகள் அங்கு இயங்கி வருவது பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. அதனைத்தொடர்ந்து மட்டக்களப்பு நகரில் உள்ள அரசடி சந்தியில் அண்மையில் காவல்துறை சார்ஜன் ஒருவர் கைத்துப்பாக்கி அணியினரின் தாக்குதலில் உயிரிழந்துள்ளதாகவும் மேலும் ஒருவர் காயமடைந்துள்ளதாகவும் அரசு தெரிவித்துள்ளது.

கிழக்கைப் பொறுத்தவரையில் அதன் பாதுகாப்பு தொடர்பான அரசின் தகவல்கள் மெல்ல மெல்ல வலுவிழந்து வருவதுடன் நடைபெற்று முடிந்த தேர்தல் அங்கு மேலும் நெருக்கடிகளை உருவாக்கி வருவதையும் உணர்ந்து கொள்ளமுடியும்.

# அளவெட்டி கும்பிழாவளைப் பிள்ளையார் ஆலயம்

# தேர்ச் சிறப்பு மலர் - 18.05.2008

## மஹோற்சவ பிரதம குருவின் நல்லாசி




சகல வளங்களும் நிறையப் பெற்ற அள வெட்டி கும்பிழாவளைப் பதியில் கோயில் கொண்டு எழுந்தருளி வேண்டுவார்க்கு வேண்டியதை அள்ளி வழங்கும் விநாயகப் பெருமானுடைய மஹோற்சவ விழாவில் இன்று இரதோற்சவம் சிறப்பாக நடைபெறுகின்றது. ஆன்மாக்களுடைய மும்மலங்களையும் அழித்து நோய் ,நொடி , பிணி , துன்பம் தீர்த்து சகல நலங்களையும் அள்ளித் தருவதற்கு விநாயகப் பெருமான் இன்று தேரேறி வருகிறார்.

இவ்விழாவிலே கலந்து கொண்டுள்ள அடியவர்களுக்கும் வேறு நாட்டில் இருந்து விரதமனுஷ்டித்து பெருமானை நினைத்து வழிபடுபவர்களுக்கும் இறைவன் நல்அருள் புரிய வேண்டுமென்று வேண்டி வாழ்த்தி ஆசி கூறுவதுடன் நாட்டில் மக்கள் அனைவரும் சுபீட்சமானவாழ்வு வாழ வேண்டுமென்று வாழ்த்தி இறைவனை வேண்டுகின்றேன்.

சர்வே ஜநா :சுகினோ பவந்து

பிரம்மஸ்ரீ இ. விஸ்வேஸ்வரக் குருக்கள்





## தொண்டர் சபைத் தலைவரின் ஆசிச்செய்தி



யாழ்ப்பாணத்தின் வட பகுதியாம் அளவெட்டிப் பதியின் மத்தியில் கோயில் கொண்டு நாடிவரும் நல்லடியார்களது தீவினைகளை நீக்கி வரமருளும் வேழமுகன் இன்று தேரேறி வருகிறான். இன் நன்னாவில் நாம் அனைவரும் நம்பிக்கையோடு சாந்தியும் சமாதானமும் சுபீட்சமும் நிறைந்த பெருவாழ்வை வேண்டிப் பிராத்திப் போமாக!

செ.சனந்தன்

தலைவர்,கும்பழாவளைத் தொண்டர் சபை

## விக்கினங்களை தீர்த்தருளும் விண்ணோர் பெருமானை எக்கணமும் ஏத்திடுவோம்!


"விக்கினந் தீர்க்கும் விநாயக நம எனச்
சிக்கென இறைவன் செப்பா நேரவின்
தக்கதச் சமைத்த தகைமணி நெடுந்தேர்
அச்சுமுத்து அருளும் அரசே போற்றி"

என்பது விநாயகர் போற்றித் திருவகலில் உள்ள வரிகள். எக்காரியத்தையும் தொடங்கும் முன் விநாயகரை வழிபாடு செய்து தொடங்குகிறோம். "உன்னை வழிபடுவோருக்கு நல்லருளும் வழிபடாதோருடைய கருமங்கள் தடைப்படவும் செய்வாயாக" என சிவன் விநாயகருக்கு அருளிய முறைப்படியே விநாயகனை வழிபட்டுச் செயல்கள் கருமங்கள் இனிது நடைபெறுகின்றன.

அளவெட்டி மத்தியில் அமைந்துள்ள கும்பிழாவளை விநாயகப்பெருமானின் தேர்த் திருவிழா இன்று அதி விமர்சையாக நடைபெறுகின்றது. மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமையப் பெற்ற புகழ்பெற்ற தலம் இது. உமை சமேத சிவன், வள்ளி, தெய்வானை சமேத முருகன், விநாயகப்பெருமான் ஆகியோர் மூன்று தேர்களிலும் தேரேறிவரும் காட்சி அற்புதம் வாய்ந்தது. சோழர் ஆட்சிக் காலத்தில் உக்கிர சோழனின் மகள் மாருதபுரவீகவல்லிக்கு சாபத்தினால் குதிரை முகமும், குஷ்ரோகமும் தோன்ற சாபவிமோசனம் கூறிய தவசீலர் ஒருவரின் வாக்குப் படி யாழ்ப்பாணம் வந்த மாருதபுரவீகவல்லி கீரிமலை என்னும் திவ்விய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து ஒரே நிரையில் மாவிட்டபுரம் முதல் தென்திசை நோக்கி 5கோயில்களிலே முருகப் பெருமானின் விக்கிரங்களை ஸ்தாபனம் செய்து வழிபட அவரது நோயும் குதிரை முகமும் நீங்கியது என்னும் அவரது குதிரை முகம் பிறர் பார்வைக்கு மட்டும் நிலவியதால் இதற்குக் காரணம் யாது என ஆராய்ந்த போது முருகனை வழிபட முன் விநாயகனை ஆராதனை செய்யாமையே காரணம் என தவசீலர் கூறியதால் தான் விட்ட பிழையை உணர்ந்த அரச குமாரி விநாயகனை தியானித்து கொல்லங்கலட்டி, வரத்தலம், அளகொல்லை, பெருமாக்கடவை, ஆலங்குழாய், கல்வளை வரை தென் திசை நோக்கி ஒரே நிலையில் ஏழுஸ்தலங்களில் விக்னேஸ்வரப் பிரதிட்டை செய்தார் என்றும் கூறப்படுகிறது. இத் தலங்களில் நடுநாயகமாக விளங்கும் தலமே கும்பழாவளை விநாயகர் ஆலயம். தற்போது எம் பெருமானின் ஆலயம் அமைந்துள்ள இடத்தின் முன் உள்ள சோலையிலே வரும் போது மாருதப்புரவீக வல்லியின் குதிரை முகம் மாறியதால் இவ்விடம் மாவிடு திட்டி எனப் பெயர் பெற்றது. கொம்புடன் விநாயகர் காட்சி கொடுத்தமையால் கொம்பழாவ ளை எனப் பெயர் பெற்று, இது மருவி கும்பிழாவளை என தற்போது அழைக்கப்படுகிறது.

குமாரத்தி தீர்த்தம் என்ற பெயருடன் அழகிய தீர்த்தக்கேணி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மூன்று தேர்களும் ஒரே வரிசையில் பாதுகாப்பாக விடக்கூடிய அழகிய தேர்க் கொட்டகையும் எங்கும் காணமுடியாத அளவுக்கு சிறப்பாகக் காணப்படுகிறது. விநாயகப் பெருமானின் 32 அழகிய தோற்றத்தையும் ஆலய உள் வீதியில் காணக்கூடியதாக உள்ளது. 2002ஆம் ஆண்டு இவ் ஆலயம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. புனர்நிர்மாணத்தோடு ஆலயம் சிற்ப வேலைப்பாடுகளுடன் காண்போருக்கு களிப்பூட்டும் வகையில் அமைந்துள்ளமை சிறப்பம்சமாகும். பல்கலைக்கழக மாணவர்கள் ஆய்வுக்காக இங்கு வருவது குறிப்பிடத்தக்கது. தமிழ் மக்களின் இன்னல் தீர்த்து ஆரோக்கியமான நல்வாழ்வு பெற்று எங்கும் இன்பமே சூழ்ந்து சமாதானம் மலர வேண்டும் என விக்னேஸ்வரனை பிராத்திக்கிறோம்.

## வருவாய் தேரில் தருவாய் திருவருள்!



எழில் மிகு ஈழத்திரு நாட்டில் வட பால் அமைந்துள்ள ஆலயங்களுள் பண்டைய பெருமையும் பழந் தமிழ்ப் பண்பும் செந்தமிழ் பண்ணும் இசையும் கலையும் இணைந்தே வளர்ந்திடும் அளவெட்டி எனும் ஊரிலே சரித்திரப் பிரசித்தி பெற்ற கும்பிழாவளைப் பிள்ளையார் ஆலயம் குறிப்பிடத்தக்கது.

பூர்வீகத்தில் மாடு மேய்க்கும் ஒருவர் ஒரு மரத்தின் கீழ் உறங்கி, உறக்கம் நீங்கி எழுந்த போது எதிரே உள்ள மண் மேட்டில் சோதியொன்று தெரிந்ததென்றும் சோதியைச் சூழ்ந்து எருக்கம் செடியின் மத்தியில் பெரிய கல் ஒன்று இருந்தது என்றும் இதைக் கண்ட மாடு மேய்ப்பவர் இச் செய்தியை ஊர் மக்களுக்குச் சொல்ல அவர்கள் வந்து பார்த்து அதிசயித்து இக் கல்லை சிவன் என்றும் முருகன் என்றும் அம்மை என்றும் வைரவர் என்றும் வழிபட்டனர். அப்பொழுது இறை பக்தியுள்ள ஒரு பெண்ணின் கனவில் விநாயகர் பெருமான் தோன்றி இந்த மண் மேட்டில் என்னை பிள்ளையார் -கணபதி- விநாயகர் என வழிபடும்படி கூறியதாக வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன.

விநாயக பக்தரான அந்தணர் ஒருவர் பெருமானுக்கு அபிஷேகம் செய்வதற்காக செவ்விளநீர் தரும்படி ஓர் அன்பரைக் கேட்ட போது அவ்வன்பர் அவரை ஏளனம் செய்து செவ்விளநீர் கொடுக்க மறுத்தார். இதனால் மனம் நொந்த அந்தணர் பெருமானை எண்ணி வருந்திய போது பெருமான் அவருடைய வீட்டின் தென்னை மரத்திலே ஒருபக்கம் கொம்பு முளைத்த தேங்காயும் மறுபக்கம் செவ்விளநீர் காயும் தோன்ற அருள்புரிந்தார்.

பழம் பெருமை வாய்ந்த இந்த ஆலயத்தின் இன்றைய தேர்த் திருவிழா ஒரு பொன்னான நன்நாள் விநாயகப் பெருமான் இரதத்தில் ஏறிப் பவனி வரும் காட்சி அடியார்களுக்கு கண் கொள்ளாக் காட்சியாகும். மக்களின் ஆணவத்தை அடக்கி அசுரத்தனத்தை ஒடுக்க எம் பெருமான் தேரேறி புறப்பட்டு விட்டார்.

இனிமேல் நல்லனவே நடக்கும். தீயவை அழியும் எம்பெருமானது எல்லையில்லாப் பேரருட் கருணை எல்லோருக்கும் கிடைக்க வேண்டுமென உளமாரப்பிரார்த்தித்து அவரது திருவருள் நிறைந்த பரிபூரண கிருபா கடாட்சம் அனைவருக்கும் கிட்டவும் நாட்டிலே மக்கள் அமைதியும் சமாதானமும் பெற்று வாழவும் எல்லாம் வல்ல கும்பிழாவளை விநாயகன் திருவடி தொழுது அமர்கின்றோம்.

ம.பத்மநாதன்

தலைவர்,கும்பிழாவளை தர்மகர்த்தா சபை.

மலர் வடிவமைப்பு
ச.சசீந்திரன்
டச்சு வீதி, அளவெட்டி

துஸ்யந்தன் பல்பொருள் வாணிபம்
மகாத்மா வீதி,
அளவெட்டி வடக்கு.
உரிமையாளர்:-ச.விக்கி

SIT COMPUTER CENTER &
RAMANAN VIDEO CENTER
ALAVEDDY

கஜமுகன் பல்பொருள் வாணிபம்
அருணோதயக் கல்லூரிக்கு
அருகில்
அளவெட்டி.
தொ.பே:-021222 7612
0602215148

விமல் போட்டோ
அன் வீடியோ
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி:- 0776305183

விநாயகர் சைவ உணவகம்
கூட்டுறவ்வாளர் வீதி,
அளவெட்டி.

விநாயகர் தொலைத்
தொடர்பகம்
அளவெட்டி மேற்கு
தொ.பே:-0602212561
0602219412

நியு சாந்தி
அழககம்
அளவெட்டி தெற்கு
அளவெட்டி.

சுகப்பிரதா தொலைத் தொடர்பு சேவை
உள்நாட்டு, வெளிநாட்டு,இன்ரநெற், பக்ஸ்போட்டோ பிரதி அனைத்திற்கும் தொடர்கொள்ள வேண்டிய இலக்கம்
தொ.பே.0602213322-0094212227123
0214591285-0094602213322
குறைந்த கட்டணம் நிறைந்த சேவை
கும்பிழாவளை வீதி, அளவெட்டி .

விநாயகர் களஞ்சியம் &
தொலைத் தொடர்பு சேவை
கூட்டுறவாளர் வீதி,
அளவெட்டி.
தொ.பே:-0602212878-0094602212878
0214591935-0094214591935

ரூபன் பல்பொருள் வாணிப
&
திரு மெடி கிளினிக்
பிரதான வீதி,
அளவெட்டி .

கரன் நகைத்
தொழிலகம்
மகாத்மா வீதி, அளவெட்டி.
குறித்த தவணையில் ஓடர் நகைகள் அனைத்தும்
செய்து கொடுக்கப்படும்
உரிமையாளர்:-கு.வித்யாகரன்

ஸ்ரீ காளி கிறீம் ஹவுஸ்
அன்பான வாடிக்கையாளர்களுக்கு சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட சுவையான குளிர்பான வகைகளுக்கு உடனுக்குடனும் ஓடர்களும் செய்து பெற்றுக்கொள்ளலாம்.
ஸ்ரீகாளி கிறீம் ஹவுஸ்
கட்டுவன் வீதி மல்லாகம்.
தொ.பே.0776997863
உரிமையாளர்-ரி.ரகுநாதன்

கதிர்காமசிங்கம் சன்
பல்பொருள் வாணிபம்
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி
தொ.பே:-0602213384

மக்களின் மனமறிந்த மக்கள் வங்கியில்
நிலையான வைப்புக்களுக்கு அதிகூடிய 17% வீதம் வட்டியாக வழங்கப்படுகின்றது. அதுமட்டுமல்ல துரிதமான அடகு சேவையும் குறைந்த வட்டியில் கூடிய அடகு முற்பணத்தையும் பெற மக்கள் வங்கி, இணுவிலை நாடுங்கள்.
முகாமையாளர்
மக்கள் வங்கி
இணுவில்

குமார் தொழிற்சாலை
மரஅரிவு, தச்சுவேலை, வெல்லிடிங் வேலை, பந்தல் சேவை, கொங்கீறீற் ஆகிய வேலைகள் சிறந்த முறையிலும் உரிய தரத்திலும் குறித்த காலத்தில் செய்து கொடுக்கப்படும்.
மகாத்மா வீதி, கும்பிழாவளை, அளவெட்டி.
தொ.பே.0214591786

அம்பிகா
ஐஸ்கிறீம்
சுத்தமானது, சுகாதாரமானது,
சுவையானது.
பாடசாலைகள்,மங்களகரமான
வைபவங்களுக்கு ஓடருக்கு குறைந்த
விலையில் செய்து கொடுக்கப்படும்.
மலைவேம்படி. அளவெட்டி தெற்கு

பிள்ளையார்
களஞ்சியம்
அளவெட்டி மத்தி,
அளவெட்டி.

கே.கே.முகுந்தன்
சைக்கிள் வேக்ஸ்
அளவெட்டி.

# தமிழர்கள், முஸ்லிம்கள் எதிர்பார்த்த அதிகாரப்பரவலாக்கலுக்கும் தேர்தல் வெற்றிக்கும் இடையில் பாரிய இடைவெளி

## எக்கொனமிஸ்ட் வார ஏடு தெரிவிப்பு

கிழக்கில் அரசாங்கம் பெற்றுக்கொண்ட தேர்தல் கன்னி வெற்றி குறித்து மகிழ்ச்சி அடைய முடியாத சூழ்நிலை ஒன்றே அங்கு நிலவுவதாக 'எக்கொனமிஸ்ற்' வார .ஏடு தெரிவித்துள்ளது.

கடந்த புதன்கிழமை வெளி வந்த எக் கொனமிஸ்ற் வார ஏட்டில் தெரிவிக் கப்பட் டுள்ளதாவது,

கிழக்கு தேர்தலின் போது அப்பிரதேச மீனவர்களுக்கு அரசாங்கத்திடம் இருந்தும், விடுதலைப் புலிகளிடம் இருந்தும் சிறந்த தேர்தல் பரிசு கிடைக்கப்பெற்றது.

வாக்களிப்பு நடைபெறுவதற்கு முன்னர் சிங்களத் தேசியவாத கொள்கைகளைப் பின்பற்றும் அரச தலைவர் மஹிந்த ராஜ பக்ஷ அரசாங்கம் திருகோணமலை துறை முகத்திற்குள் பிரவேசிக்க விதிக்கப்பட்டிருந்த தடை தளர்த்தப்பட்டது.

தமிழீழத்தின் தலைநகராக விடுதலைப் புலிகளால் பிரகடனப்படுத்தப்பட்ட திருகோண மலை துறைமுகத்தில் வைத்து வாக்களிப்பு ஆரம்பமாவதற்கு சில மணித்தியாலங் களுக்கு முன்னர் 'இன்விசிபிள்' என்ற கடற் படை கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.

கிழக்கினை கடந்த் ஒரு தசாப்த காலமாக கட்டுப்பாட்டில் வைத்திருந்த தமிழீழ விடு தலைப்புலிகள், கடந்த ஆண்டு கிழக்கிலி ருந்து வெளியேறினர்.

**மஹிந்தவின் முதலாவது பரீட்சை**

விடுதலைப் புலிகளிடமிருந்து விடுவிக் கப்படும் பிரதேசங்களில் அபிவிருத்திப் பணி களும் அதிகாரப்பரவலாக்கலும் வழங்கப் படும் என அரச தலைவர் மஹிந்த ராஜ பக்ஷவின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பு அரசாங்கம் வாக்குறுதி அளித்திருந் தது. அண்மைய கிழக்குத் தேர்தல் இந்த வாக்குறுதி தொடர்பான முதலாவது பரீட் சையாகும்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளுடன் இணைந்து அரசாங்கம் கிழக்குத் தேர்தலில் வெற்றிபெற்றது. 37 ஆசனங்களில் 20 ஆசனங்களை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பெற்றுக்கொண்டது. பிரதான எதிர்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிசுடன் இணைந்து 15 ஆசனங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

படையினரின் முக்கிய போர் வெற்றிக ளுக்கு பிரதான பின்புலமாக விளங்கிய தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் தலைவர் சிவ நேசதுரை சந்திரகாந்தன் என்ற பிள்ளை யான் நேற்று முன்தினம் முதலமைச்சர் பதவி ஏற்றுள்ளார்.

பல்வேறு மனித உரிமை மீறல்கள் குறித்து அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்தப் படுகின்றது.

**தேர்தல் வன்முறைக்கு மிகச்சிறந்த சான்று**

ஆயுததாரிகளினால் தேர்தல் நாள் பல்வேறு தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றதாக சுயாதீன கண்காணிப்பாளர்




கள் தெரிவித்துள்ளனர். குறிப்பாக வாக்குச் சீட்டு மோசடி, மிரட்டல்கள் உள்ளிட்ட பல் வேறு வன் செயல்களில் ஆயுததாரிகள் ஈடுபட்ட தாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இந்தத் தேர்தல் இன மற்றும் சமூகங்க ளுக்கிடையிலான முறுகல் நிலைகளை அபரிமிதமாக அதிகரித்துள்ளது.சிங்கள முஸ் லிம் மக்கள் செறிவாக வாழும் பிரதேசங் களில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் வேட்பாளர்கள் வெற்றி பெற்றுள்ளமையே தேர்தல் வன் முறைகளுக்கு மிகச் சிறந்த சான் றாக அமைந்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதல் களின் எதிரொலியாக கிழக்கு மற்றும் வடக் கில் இருக்கும் நூற்றுக்கணக்கான இளைஞர் கள் காணாமல் போயுள்ளனர்.

போரினால் இடம் பெயர்ந்தவர்களில் இந்த காணாமல் போனவர்கள் அடங்குவ தாக அரசாங்கம் தெரிவிக்கின்றது. குறிப்பாக சில ஆயிரக்கணக்கானோர் போர் காரண மாக இந்தியாவில் சரணாகதி அடைந்துள்ள னர் என்பதே அரசாங்கத்தின் வாதமாகும்.

எனினும், தமது சொந்த மண்ணின் மைந் தர்களை அரசாங்கம் கொன்று குவிப்பதாக மனித உரிமைகள் அமைப்புக்களும்,இராஜ தந்திரிகளும் அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்டுகின்றனர்.

திருகோணமலை துறை முகத்திற்கு அருகாமை யில் உள்ள முகாம் ஒன் றில் தங்கியிருக்கும் சுமதி என்ற பெண் தனது கண வரை வெள்ளை வானில் வந்த கும்பல் ஒன்று கடந்த 9ஆம் திகதி கடத்திச் சென் றதாகத் தெரிவிக்கின்றார்.

கடத்தல் சம்பவம் நடை பெற்ற பிரதேசத்தில் அதிக மான இராணுவச் சோத னைச் சாவடிகள் காணப்படு வதாகவும், தமது கணவர் கொலை செய்யப்பட்டிருக் கலாம் என அஞ்சுவதாகவும் சுமதி தெரிவிக்கின் றார்.

கிழக்கில் அரசாங்கம் பெற்றுக்கொண்ட தேர்தல் 'கன்னி வெற்றி' குறித்து மகிழ்ச்சியடைய முடியாத சூழ்நிலை ஒன்றே அங்கு நிலவுகின்றது. அரசாங்கம் கிழக்கு மக்கள் குறித்து நேர்மையான கரி சனை காட்டி வருகின்றது என்று கருதினா லும் கூட தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் எதிர் பார்த்த அதிகாரப்பரவலாக் கல் கோரிக்கைகளுக்கும் கிழக்குத்தேர்தல் வெற்றிக்கும் இடையில் பாரிய இடைவெளி காணப்படுகின்றமை ஒரு வெளிப்படையான உண்மை என்பதை மறுக்கமுடியாது.

13ஆவது திருத்தத்தின் அடிப்படையில் மாகாண சபைகளுக்கு காணி மற்றும் காவல் துறை அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும். எனினும் இந்த அதிகாரங்களை அவ்வாறே வழங்க கொழும்பு அரசாங்கம் தயாராக இல்லை .

அரசாங்கம் தமிழ்மக்களை அடக்கு முறை களுக்கு உட்படுத்தி இருப்பதாக பெரும் பான்மையான தமிழ் மக்கள் கருதுகின்றனர். இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை வடக்கிலும் இதே கருதுகோள்தான் வலுப் பெற்றுக்காணப்படுகின்றது.

**மோதல் தீவிரமடையலாம்**

போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள் ளப்பட்டதன் பின்னர் இராணுவத் தளபதி உள்ளிட்ட படைத்தரப்பின் மூத்த உறுப்பினர் கள் பலர் விடுதலைப் புலிகளை இந்த ஆண்டு இறுதிக்குள் வெற்றிகொள்ள முடி யும் என கட்டியம் கூறியிருந்தனர்.

சில வேளைகளில் இது சாத்தியமாகலாம். சுயமாக ஆயுதப் பயிற்சிகளை மேற்கொண்ட 10 ஆயிரம் அளவிலான விடுதலைப் புலி உறுப்பினர்களுடன் அதி நவீன ஆயுதங்களை யுடைய 1இலட்சத்து 60 ஆயிரம் துருப்பினர் மோதல்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

பத்து வருட மோதல்களுக்குப் பின்னர் படை யினர் வடக்குப் பிராந்தியத்தின் சில கிலோ மீற் றர் பகுதியை புலிகளிடமிருந்து கைப்பற்றி யுள்ளனர்.

கடந்த ஏப்ரல் 23 ஆம் திகதி முகமாலை யில் மேற்கொண்ட தாக்குதல்களில் 185 படை யினர் கொல்லப்பட்டதாக இராணுவத் தரப்பு இரகசிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

மொத்தமாக 5ஆயிரம் விடுதலைப்புலி உறுப்பினர்களே இன்னமும் எஞ்சியிருப் பதாக இராணுவத்தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். இந்த ஆண்டில் 3ஆயி ரத்து 400 விடுதலைப்புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவிக் கின்றது.

கடந்த 18 மாதங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் 10க்கும் அதிகமான ஆயுதக் கப்பல்களை அரசாங்கம் தாக்கியழித்துள் ளது. இந்தியாவும் தமது கரையோரப் பாது காப்பை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் தமிழீழ விடு தலைப்புலிகள் அதிகமான தாக்குதல்களை மேற்கொள்ளக்கூடும்எனவும் அச்சம் தெரி விக்கப்படுகிறது.

இதனால் அரசாங்கமும் கடு மையான தாக்குதல்களை முன்னெடுக்கக் கூடும். மாற் றுக் கொள்கைகளுக்கான கேந் திர நிலையத் தினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்பின்படி பெரும் பான்மையான சிங்கள மக்கள் போரினை ஆதரிக்கின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

16 சதவீதமான சிங்கள மக்களே தமிழீழ விடு தலைப்புலிகளுடன் சமரசப் பேச்சுக் களை தொடர வேண்டும் என கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்தில் இடம்பெறும் ஊழல் மோசடிகள் அதிகரித்துச் செல்லும் பண வீக்கம் என்பவற்றை தாங்கிக்கொண்டு போருக்கு தொடர்ச்சியாக சிங்கள பெரும் பான்மை மக்கள் ஆதரவு வழங்குவார்கள் என்று நீண்ட காலத்திற்கு எதிர்பார்க்க முடி யாது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உணவுக்காக கையேந்தி நிற்கும் மக்கள்
## நர்க்கீஸ் பாதிப்பால் மியான்மரில் துயரம்

(குங்யாங்கூன்)

நர்கீஸ் புயலால் பாதிக்கப்பட்ட மியான் மர் மக்களின் எதிர்காலம் கேள்விக் குறியாகி யுள்ளது. வீதிகளில் உணவுப் பொருட்களை எதிர்பார்த்து ஏராளமானோர் கையேந்தி நிற்கும் காட்சி , காண்போரின் கண்களை குளமாக்குகிறது. மியான்மரில் கோரத் தாண்டவ மாடிய நர்க்கீஸ் புயலுக்கு



ஏராளமானோர் பலியாகிவிட்டனர். தொடர்ந்து மழை பெய்து வருவதால் ஆயிரக் கணக் கானோர் உணவு, உடை, வசிப்பிடம் போன்ற அடிப்படை தேவைகள் இல்லாமல் அவதிப் பட்டு வருகின்றனர்.

நிவாரணப்பணிகளை மேற்கொள்ள த அமெரிக்கா உள்ளிட்ட ஏராளமான நாடுகள் முன்வந்தபோதும் அந்நாட்டு இராணுவ அரசு அதை ஏற்க மறுத்துவிட்டது. கடும் கட் டுப் பாடுகளுடன் ஒரு சில நாடுகள் மட்டுமே நிவாரணப் பணிகளை செய்து வருகின்றன. சில தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் நிவாரணப்பொருட்களை வழங்கி வருகின் றன. உடைகள் இல்லாமல் ஏராளமான மக் கள் பலத்த மழைக்கு மத்தியில் உணவுப் பொருட்களை எதிர்பார்த்து வீதி ஓரத்தில் வரிசையாக காத்திருக்கின்றனர். தன்னார்வ தொண்டுநிறுவனங்களின் வாகனங்கள் அவர்களைக்கடந்து செல்லும் போது உணவுப் பொருட்களுக்காக அவர்கள் கையேந்தி நிற்கும் காட்சி பரிதாபமாகவுள்ளது.

புயலால் இறந்த பலரின் உடல்கள் அப்புறப்படுத்தப்படாமல் அழுகிய நிலையில் சாலைகளில் குவித்து வைக்கப்பட்டுள்ளன . இதனால் தொற்றுநோய் ஏற்படும் அபாய

### உலக தரிசனம்

மும் ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பகுதி களில் நிவாரணப்பணிகளை முடித்துவிட்டு திரும்பும் வெளிநாட்டு தன்னார்வ தொண்டு நிறுவனங்களிடம் மியான்மர் இராணுவ வீரர்கள் கடுமையாக நடந்து கொள்கின் றனர். அவர்களிடமிருந்து கமராக்களை பறித் துக்கொண்டு எச்சரித்து அனுப்புகின்றனர்.

(அ-5)

## எரிபொருள் குழாயில் தீ பற்றியதில்
## 100 பேர் பலி, 20 பேர் காயம்

(லா்கோஸ்)

நைஜீரியாவில் வீடுகள் மற்றும் பாட சாலையொன்று அமைந்துள்ள பகுதியினூ டாக அமைக்கப்பட்டிருந்த எரிபொருள் குழாய்யொன்று தீப்பற்றி எரிந்ததில் 100 பேருக்கும் அதிகமானோர் பலியான துடன்



சுமார் 20பேர் எரிகாயங்களுக்கு உள்ளா கியுள்ளனர் . பிரதான நகரான லாகோஸி லிருந்து அந்த நாட்டின் தூரப் பிரதேசங்களுக்கு எரி பொருளை விநியோகிக்க பயன்படுத்தப்பட்ட குழாயொன்று தெரு நிர்மாண வேலைகளில் பயன்படுத்தப்பட்ட இயந்திரமொன்றால் சேதப் படுத்தப்பட்டதையடுத்தே இத் தீ விபத்து ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து தீ வேகமாக எரி பொருள் குழாயை அண்மித்த பகுதிகளுக்கு பரவியதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் இத் தீ விபத்தில் எரிந்து நாசமாகிய பாடசாலையிலிருந்த மாணவர்க ளில் அநேகர் தீ முற்றாக பரவுவதற்கு முன்பே வெளியேறி விட்டதாக நைஜீரிய செஞ்சிலு வைச் சங்கத்தின் அனர்த்த விவகார ஒருங் கிணைப்பாளர் சுலைமான் மெய் குபி தெரி வித்தார்.

(அ-5)

## விண்வெளி விதைகளை விதைத்து
### சீனாவில் புரட்சி

விண்வெளி விதைகளை விதைத்து வழக் கத்தை விட மிகப்பெரிய அளவில் பூசணி ,கத் தரிக்காய், கோஸ் போன்ற காய்கறிகளையும் ஒரேஞ், வாழை போன்ற மரபணுவில் மாற் றம் செய்து விதைகளை உற்பத்தி செய்து அவற்றை விண்வெளிக்கு அனுப்பி திரும்ப வரவழைத்து பூமியில் விதைத்தால் காய்கறி கள், பழங்கள் பல மடங்கு பெரிதாக வளர்க்க முடியும் என்று சீன விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.


தெற்கு சீனாவில் உள்ள விவசாயிகள் இப்போது விண்வெளிக்கு அனுப்பி வர வழைக் கப்பட்ட விதைகளை ஆய்வு மையங் களில் பகுத் துணர்ந்து அதை மரபியல் முறையில் பல ஆயி ரம் விதைகளாக உருவாக்கி அவை விவசாயிக ளுக்கு விநி யோகம் செய்யப்படுகிறது.

இது குறித்து விஞ் ஞானிகள் கூறுகை யில்,

இயற்கையான முறையில் கிடைக்கும் விதை களை பயிர் செய்வதை விட இந்த விண்வெளி விதைகளை விதைத்து பயிர் செய்தால் பல மடங்கு பெரிதான காய்கறி, பழங்கள் கிடைப் பது மட்டுமல்ல அவற்றில் விற்றமீன் கனிமசத் துக்க ளும் அதிகமாக உள்ளன. மனிதர்களுக்கு இது மிகவும் பயனுள்ளது.சீன மக்கள் தொகை பெருகிக் கொண்டிருக்கும் நிலையில் உணவுத் தட்டுப் பாட்டை சமாளிக்க இந்த முறை உதவும் என்று தெரிவித்தளர் .

(5)

# கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் (புதுக்கோவில்) தேர்ச் சிறப்பு மலர் - 18.05.2008



## மஹோற்சவ பிரதம குருவின் ஆசிச் செய்தி



'புதுக்கோவில்' என அழைக்கப் படும் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமிகோவில்தேர்த்திருவிழா வெகு சிறப்பாக நடைபெறும் இந் நாளில் தேர்த்திருவிழா மலரை வெளியிடு வது சிறப்பானதாகும்.

எமது வாழ்க்கைக்கு உறுதுணையாக அமைவது தெய்வ வழிபாடாகும். இதனை நன்கு உணர்த்தும் முகமாக சுப்பிரமணியப் பெருமான் தேரில் பவனி வரு வது சிறப்பிற்குரியதாக அமைகிறது.

அந்த வகையில் கொக்குவில் பதிவாழ் மக்களின் இடர்களை நீக்கி அருள்பாலிக்கும் பொருட்டு திருத் தேரில் பவனி வரும் எல்லாம் வல்ல கிருபாகர சிவ சுப்பிர மணிய சுவாமிகளின் தேர்த்திருவிழா எம்மண்ணுக்கு மாண்புதர வேண்டி நல்லாசி கூறி அமைகிறேன்.

சிவஸ்ரீ க.சிவதாஸக் குருக்கள்.

## அறங்காவலர் சபைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி




யாழ்ப்பாண நன்நகரின் மத்தி யிலே புதுக்கோவில் என அழைக் கப்படும் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் வீற்றிருக்கும் முருகப்பெருமான் தரு தொல்லை நீக்கிட படர்தரு இருளில் பரிதாய் வந்து பழவினை ஓட்டிட, சுடர் தரு அமுதாய் சுருதிகள் கூறிட, சுகமது தந்திட இன்று தேரேறி வருகிறான்!

தன்னை நாடி வரும் அடியவர்களின் தீராத் துய ரங்களைப் போக்கி நலமளிக்கும் வேலனுக்கு சிறப் பான உற்சவமாக தேர்த்திருவிழா கொண்டாடப்படு கிறது. தேர்த் திருவிழாவான இன்று எம்பெருமான் அலங்கார சொரூபமாக பெருந்திரளான மக்கள் புடை சூழ தேரில் ஆரோகணித்து பவனி வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

இந்நாளில் நாம் எமது மண்ணிலே என்றும் சாந்தி யும் சமாதானமும் நிலவி யாவரும் மன அமைதியுடன் இன்புற்றிருக்க எல்லாம் வல்ல சுப்பிரமணிய சுவாமி அருள்பாலிக்க வேண்டிப் பிரார்த் திப்போமாக.

கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்,
கொக்குவில்.

தம்பிஐயா சகாயதேவன்
தலைவர்,
அறங்காவலர் சபை.



## ஆலய வரலாறு

கொக்குவில் புகையிரத நிலைய வீதிச் சந்திக்கு வடக்கே காங்கேசன்துறை-யாழ்ப்பாணம் வீதியின் கிழக்கே வீதி ஓரமாக இவ் வாலயம் அமைந் துள்ளது.

புதுக்கோவில் என அனைவராலும் அழைக்கப்படும் இக்கோவில் 1865ஆம் ஆண்டை அண்மித்த காலத்தில் தோன்றியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. அக்கால கட்டத்தில் இந்தச் சூழலில் சைவ வேளாள மரபின ராகிய பதினைந்து குடும்பத்தினர் அவ்விடத்தில் வாழ்ந் தனரென்றும் அன்றைய அப்பதினைந்து குடும்பத் தலை வர்களது சிந்தனையின் விளைவாகத்தான் இப் பெரிய புதுக்கோவில் உருவாகியுள்ளது எனவும் கூறப்படுகிறது.

இந்த ஆலயத்தை நல்ல முறையில் செயற்படுத்த 1871ஆம் ஆண்டில் சண்முகம் முருகேசு என்றவர் தலை மையில் வேலாயுதர் முருகேசு, சட்டநாதர் சின்னப்பு, சிறுத்தம்பு அம்பலவாணர், தாமோதரம்பிள்ளை ஆகி யோரைக் கொண்ட பஞ்சகர்த்தா சபையொன்று உரு வாக்கப்பட்டது.

இப் பஞ்சகர்த்தா சபையின் முயற்சியில் ஆலயம் அமைப்பதற்கான நிலம் கொள்வனவு செய்யப்பட்டது. இந்நிலத்துடன் சண்முகம் முருகேசு எனும் பெரியார் தமது காணியின் ஒரு பகுதியை சேர்த்து வழங்கியுள்ளார்.

இந்த தரும சாதன நிலத்தில் முன்னர் தீர்த்தக் கேணியொன்றும் மடம் ஒன்றும் இருந்திருக்க வேண்டு மெனவும் அம்மடம் 'ஆடியபாதன் மடம்' என அழைக் கப்பட்டது என்றும், அதனா லேயே அந்நிலப்பகுதியை 'ஆடியா மடத்தடி', என்றும் 'ஆடிய பாதன் மடத்தடி' என்றும் சிலர் குறிப்பிடுகிறார்கள் என்பதும் கர்ண பரம்பரையாக வரும் வரலாறு.

நிலக் கொள்வனவை அடுத்து ஆலய வேலைகள் ஆரம்பமாகி கர்ப்பக்கிரகம், மேல் விமானம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், நிருத்த மண்ட பம் என்பன அமைக்கப்பட்டன. தென் மேற்கில் விநா யகருக்கான சந்நிதியும் வடக்கில் திரு மஞ்சனக் கிணறும் அமைக்கப்பட்டன.

வசந்த மண்டபத் திருப்பணியை அடுத்து வைரவ மூர்த்தி பிரதிட்டை, நவக்கிரகப் பிரதிட்டை, வேணு கோபால மூர்த்தி பிரதிட்டை, ஆறு முகசாமி பிரதிட்டை முதலியன இடம் பெற்றன.

இதனைத் தொடர்ந்து பக்தர்களது ஆக்க பூர்வமான திருப்பணி காரணமாக ஆலயம் புதுப் பொலிவு பெற ஆரம்பித்தது. பூசனை முறை யாக நடைபெறு வதற்கு இக்கட்டான நிலை ஏற்பட்ட ஒரு காலகட்டத்தில் முருகனடியார்கள் வீடுதோறும் பிடியரிசிக் குட்டான்களிலே தின மும் பிடியரிசி சேமித்து பின்னர் அதனைப் பண மாக்கி கிரியைகள் இடையூறின்றி நடைபெற உத விய சந்தர்ப்பங்களும் உண்டு.

இந்திய அமைதி காக்கும் படையினரின் நடவ டிக்கை காரணமாக 1987-1990 காலப் பகுதியில் ஆலயம் பெரும் சிதைவுக்குள்ளாகிய போதும் முருகனடியார்களது முயற்சியால் ஆலயம் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு 1998 ஏப்ரல் 10ஆம் திகதி பங்குனி உத்தரத்தில் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் இடம்பெற்றது.

இவ்வாலயத்தின் முதல் பூசகராக இருந்த பெருமை சிவஸ்ரீ சின்னப்பா ஐயர் அவர்களைச் சாரும். 1982 ஆம் ஆண்டிலிருந்து சிவஸ்ரீ குமார சாமி குருக்கள் பரம்பரையினரே கோவில் பூசை களை சிறப்புறச் செய்து வருகின்றனர்.

வைகாசி பூரணைக்கு முதல் நாள் தேர்த் திரு விழாவும் வைகாசி பூரணையில் தீர்த்தமும் நடைபெறுவதால் இவ்வாலயத்தின் கொடி யேற்றம் முதலான விழாக்கள் சித்திரையிலும் கொடியிறக்கம் பூங்காவனம் என்பன ஆனி யிலும் நடைபெறலாம்.

## கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபரின் வாழ்த்துச் செய்தி



கொக்குவில் இந்துக் கல்லூரி யின் வளாகத்தில் வீற்றிருந்து அருளாட்சி செய்யும் கிருபாகர சிவசுப்பிரமணியப் பெருமனுக்கு இன்று தேர்த்திருவிழா.

தேர்ஓடும்திருவீதியில்அமைந் துள்ள எமது கல்லூரியின் பெரு மைக்கும் சிறப்பிற்கும் கந்தப் பெருமானின் கருணையே பெருந்துணையாய் அமை கின்றது.

தெய்வீகச் சூழலும், கல்வி அழகும் நிறைந்த கிருபாகர சிவசுப்பிரமணிய பெருமானின் கோட்டத்தில் தேர் ஓடும் இத் திருநாளில் எம்பெருமானின் திவ்விய அனுக்கிரகம் எல்லோருக்கும் கிடைக்க பிரார்த்தித்து தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றேன்.

அ.அகிலதாஸ் (அதிபர்),
இந்துக்கல்லூரி கொக்குவில்.


## தேர்த் திருவிழா சிறப்புற அமைய வாழ்த்துவோர்

மகாலட்சுமி தேனீர் அகம்
கே.கே.எஸ் வீதி,
கொக்குவில்.
(சி-1135)

செந்தூரன் எலெக்ரோனிக்
கே.கே.எஸ் வீதி,
கொக்குவில்.
(சி-1135)

பரணி குளிர்பான நிலையம்
கே.கே.எஸ் வீதி,
கொக்குவில்.
(சி-1137)

ஏசியன் அக்கடமி
கேணியடிச் சந்தி,
கொக்குவில்.
கிளை:-
ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு.
(சி-1143)

அம்பாள் களஞ்சியம்
கே.கே.எஸ் வீதி,
கொக்குவில் சந்தி.
(சி-1139)

ஸ்ரீ கிருஷ்ணா நகைத் தொழிலகம்
கே.கே.எஸ் வீதி,
கொக்குவில்.
(சி-1140)

சிவசம்பு களஞ்சியம்
இல. 3 மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-1141)

எவ வன் ஸ்ருடியோ
கே.கே.எஸ் வீதி,
கொக்குவில் சந்தி.
ஆனந்தா படமாடம்
கொக்குவில்.
(சி-1138)

இராஜேந்திரா வர்த்தக நிலையம்
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-1142)


எரிக்கணேஸ்
பல், மூக்கு
கண்ணாடியகம்
இல. 564,566 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
இல.91, கே.கே.எஸ். வீதி,
கொக்குவில்.
(சி-1144)

# Mobile@net Computer Services

324, Palaly Road, Jaffna, Sri Lanka.

# Microsoft Awards

## ~MCP~MCTS~MCSE~MCSA~



### யாழ். அரச அதிபரின் செய்தி

தகவல் தொழில்நுட்பயுகம் அதிவேக வளர்ச்சியை எட்டியுள்ள இக்காலகட்டத்தில் கணனியின் சேவை அளவிடற்கரியதொன்றெனலாம். உலகின் ஒரு முனையிலிருந்து மறு முனைக்கு தொடர்பு கொள்வதற்கும், தரவுகளை உடனுக்குடன் அறியவும் வானிலை அவதானிப்பு எதிர்வு கூறல், புதிய கண்டுபிடிப்புகள், வியாபாரம், விளம்பரம் போன்ற இன்னோரன்ன பயன்களை கணணி மூலம் எட்ட முடிகிறது. இதனூடாக கணனியை நாம் ஒரு வரப்பிரசாதமாகவே கொள்ளக்கிடக்கிறது.

போட்டி நிறைந்த இக் கால கட்டத்தில் வெறுமனே கணனிக் கல்வி கற்றலைத் தவிர்த்து ஆற்றலை வளர்க்கும் தொழில் முறைக் கணனிக் கல்வியைத் தேர்ந்தெடுப்பது மாணவர்களது கடமையாகும். “ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாதாம்” என்பதற்கிணங்க பயனுள்ள கல்வியாக மாற்ற வேண்டியது முக்கியம்.

இதற்கேற்ப மாணவர்கள், தொழில் வாய்ப்பை வழங்கக்கூடிய கணனிக் கல்வியைத் தேர்ந்தெடுத்து அவற்றிலே உயர் கற்கை நெறிகளை மேற்கொள்ள வேண்டும்.

இன்று கணனிப் பொறியியலாளர் கற்கையினை மேற்கொண்டு சான்றுப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளும் மாணவர்களுக்கு பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு அவர்களது எதிர்காலம் சிறப்புறவும் எனது நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

*க.கணேஷ்*
அரசாங்க அதிபர்/மாவட்டசெயலாளர்,
யாழ் மாவட்டம்.



### Message from Director, University of Colombo School of Computing

I would first like to congratulate all the students receiving awards today. I would also like to congratulate Mobile@net Computer Services for their unfailing commitment to ICT education and training in one of the most difficult parts to operate in the whole of Sri Lanka

As a way of reciprocating this, we at the UCSC have continued even against advice sometimes, and even when there has been a single student from Jaffna, to continue to offer the BIT examinations in Jaffna. For enabling this, I would be failing in my duty if I do not also thank the Dean of the Faculty of Science of the University of Jaffna.

Dear students, you have chosen to pursue an education in one of the fastest changing technologies known to man! You have done it in the most difficult of circumstances. The limit is the sky for your future progress. As the well known futurist Alvin Tofler has said, "The illiterate of the 21st century will not be those who cannot read and write, but those who cannot learn, unlearn, and relearn". Today, you are armed with new knowledge. Hold on to it - but not too tightly. Tomorrow a new technology may cause for what you know today to have to be 'unlearned'. And the day after tomorrow, you may have to relearn it in a new and different way. So, if you want to make yourself immune to the changes in technology and keep abreast the new knowledge being produced in the world, learn the skills of learning, unlearning and relearning.

Finally, let's also put these skills to work in our daily and national lives. We learn many things in life - including bad things such as prejudices. As young people, you are in a position to make a change, but applying the skill of unlearning such prejudices as soon as you become aware of them. Then you can relearn them with a fresh perspective and see things from the other person's perspective. And then the world will make sense. And then you would have graduated from storing up knowledge to exercising wisdom!

I wish all of you and the Director and staff of Mobile@net Computer Services, all the very best in all your future endeavors. May we all live to see a Sri Lanka at peace!

- ***Dr. Ruvan Weerasinghe***, Director/UCSC

அரச உத்தியோகத்தர்களுக்கு கணனிப்பயிற்சி வழங்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட ஐ.நா. அபிவிருத்தி திட்ட கணனிவள ஆளணியினரின் சேவை ஏனையோருக்கும் கிடைக்கும் நோக்கில் ஐ.நா. அபிவிருத்தி திட்டத்தின் ஆதரவுடன் 2000ம் ஆண்டு MCS நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் அடிப்படைக் கணனிப் பயிற்சி நெறிகளை மட்டும் கொண்டிருந்த MCS நிறுவனம் தற்போது கணனித் துறையில் அதியுயர் கற்கைநெறிகளான பட்டப் படிப்புகளையும், உலக முன்னணி நிறுவனங்களின் புலமை சார் அங்கத்துவத்திற்கான கற்கைநெறிகளையும் வழங்குகிறது.

கடந்த ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகத்தினால் பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடந்த பட்டமளிப்பின்போது BIT கற்கை நெறியை சிறப்பாக போதிக்கும் நிறுவனத்திற்கான விருதினை எமது நிறுவனம் பெற்றமை இதற்குச் சான்றாகும்.

இவ்வாண்டு முதல் சர்வதேச சந்தையில் தகவல் தொழில் நுட்பத்தில் அதிக ஊதியத்துடனான தொழில் வாய்ப்பையுடைய மைக்ரோசொப்ற் கணனிப் பொறியியலாளர் கற்கை நெறிகளையும் சன்மைக்ரோசிஸ்ரம் ஜாவா(Sun-Java) கற்கைநெறிகளையும் நடாத்தும் நிறுவனமாக தேர்ந்தெடுக்கப்பட்டது மட்டுமல்லாது சர்வதேச ரீதியில் பரீட்சைகளையும் நடாத்தும் வலையமைப்பிலும் இணைக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் சென்று கணனிக்கற்கை நெறிகளை அதிகூடிய செலவில் கற்கமுடியாத எம்மாணவர்களுக்கு அக் கற்கை நெறிகளை இங்கு நடாத்தி அந்நிறுவனங்களின் பரீட்சைகளையும் இங்கு செயற்படுத்தி இன்று அந் நிறுவனங்களின் சான்றிதழ்களையும் வழங்கி உலகத்தர கணனி வல்லுனர்களாக சர்வதேச தொழிற்சந்தைக்கேற்ப மாற்றியுள்ளோம்.

கற்கைநெறிகளை நடாத்துவது மட்டுமல்லாது யாழ் மாணவர்களை உள்வாங்கி மென்பொருள் தயாரிப்பு, கணனி வலையமைப்பு ஆகிய துறைகளில் தனது ஆற்றலை மேலும் விருத்தி செய்து வரும் இந்நிறுவனம் உலகத்தரத்திற்கேற்ப யாழ் மாணவர்களையும் கணினியுகத்திற்கு தயார்படுத்தி வருகின்றது.

எமது நிறுவனத்தின் வளர்ச்சிக்கு சிறப்பாக செயற்படும் எனது சகவிரிவுரையாளர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எனது நன்றிகள். - இயக்குனர் MCS



## Certificates Holders

1.S.Sivaskaran(MCP,MCSA,MCSE+Sec.Spl)
2.T.Sivarupan(MCP,MCSA,MCSE)
3.T.Merrushan(MCP,MCSA,MCSE)
4.S.F.Dinesh Frankilin(MCP,MCSA,MCSE)
5.K.Ramesh(MCP,MCSA,MCSE)
6.K.Kumaran(MCP,MCSA,MCSE)
7.T.Nissanthan(MCP, MCTS)
8.M.Kohulan(MCP, MCTS)
9.T.Sivatharsi(MCP, MCTS)
10.T.Sanjeevan(MCP, MCTS)
11.B.Muralitharan(MCP, MCTS)
12.T.Senthan(MCP, MCTS)
13.N.Sanjuthan(MCP, MCTS)
14.S.Nirujan(MCP, MCTS)
15.S.Thibothanan(MCP, MCTS)
16.R.Ranesh(MCP, MCTS)
17.B.Jeyachandran(MCP, MCTS)
18.N.William Shanthakumar(MCP)
19.M.Hemalatha(MCP)
20.T.Sivathasan(MCP)
21.V.Rajarathinam(MCP)
22.G.Christy Rolkan(MCP)
23.J.Satheechan(MCP)
24.S.Sujanthan (MCP)
25.U.Thineshkumar (MCP)
26.V.Aynkaran(MCP)
27.T.Sathiya(MCP)
28.K.Sutharshini(MCP)
29.S.Tharanitharan(MCP)
30.T.Shyamala(MCP)
31.K.Sivarooban(MCP)
32.S.Jeyapirathagini(MCP)
33.J.Senthuran(MCP)
34.K.Jegaruban(MCP)
35.A.Joseph Nimalrajan(MCP)
36.S.Sivagowry(MCP)
37.T.Thardchayani(MCP)
38.S.Visaradan(MCP)
39.F.Theepan(MCP)
40.B.Bavithira(MCP)
41.N.Tharsikayini(MCP)
42.S.Sajeethan(MCP)
43.M.Phillip Jenosan(MCP)
44.N.Janaluxshan(MCP)
45.S.Janakaruban(MCP)
46.T.Geethabanu(MCP,MCSA,MCSE)
47.M.Muralini(MCP,MCSA,MCSE)
48.S.Thushithkumar(MCP,MCSA,MCSE)
49.P.Syammakrishna(MCP)
50.A.Ramesan(MCP)
51.S.Karmekavannan(MCP)
52.M.Manivasakan(MCP)
53.S.Vikneswaran(MCP)
54.M.Pratheep(MCP)
55.N.Jenakakumar(MCP)
56.B.Anijan(MCP)
57.M.Thusyanthan(MCP)
58.S.Sivesan(MCP)

(கீ/1145)

Supported by United Nations Development Program/ Jaffna Rehabilitation & Resettlement Program

# ரகுவரன் கேரக்டரில் மாற்றம்



நடிகர் ரகுவரனின் திடீர் மறைவு அனைவரது மனங்களையும் பாதித்துள்ளது. மனங்களைப் பாதித்த அதே அளவுக்கு அவர் நடித்த படங்களையும் பாதித்துள்ளது.

ரகுவரன் இந்திர விழாவில் நடிப்பதாக இருந்தது. அவரது திடீர் மறைவால் அந்த வேடத் தில் நாசர் நடித்துக்கொண்டிருக்கிறார். ரகுவரன் இந்திர விழா வில் நடிக்காததால் நாசர் அவருக்கு பதில் நடிக்கிறார். அதே நேரம் பாதிக் காட்சிகளில் ரகுவரன் நடித்திருந்தால்?

இப்படியொருசிக்கல் அடடா என்ன அழகு படத்துக்கு. ஜெய் ஆகாஷ், நிக்கோல் நடிக்கும் இந்தப் படத்தில் ஜெய் ஆகாஷின் அப்பாவாக சில காட்சிகள் நடித்தார் ரகுவரன். அவரது திடீர் மறைவால் அப்பா கதாபாத்திரத்தை மேலும் தொடரமுடியாத வாறும், படத்திலிருந்து முழுமையாக தூக்க முடியாதவாறும் இரண்டும் கெட்டான் நிலைமை. பார்த்தார் இயக்குநர் ஜெய முருகன் வசனங்களை மாற்றி, ஜெய்ஆகாஷின் அப்பா ரகுவர னை அவரது மாமாவாக்கிவிட்டார். கதைக்கு இது பொருத்த மாக அமைந்து விட்டதாம். இப்போது ஜெய் ஆகாஷின் அப்பாவாக சரத்பாபு நடித்து வருகிறார்.

# நகராட்சி தலைவி ஆகிறார் ஷெரில்



"எங்கள் ஆசான்" படத்தில் நகராட்சி தலைவியாக நடிக்கிறார் ஷெரில் பிரின்டோ. "அரசாங்கம்" படத்தில் நடித்தவர் ஷெரில். மீண்டும் விஜயகாந்த்துடன் "எங்கள் ஆசான்" படத்தில் நடிப்பது குறித்து அவர் கூறியதாவது, 'அரசாங்கம்' படத்தில் விஜகாந்த்துக்கு ஜோடி யாக நடிக்கவில்லையே என்ற வருத்தம் இருந்தது. அது இந்தப் படத்தால் விலகிவிட்டது.

அதேநேரம் இதில் துளியும் கிளாமர் இல்லாமல் நடிக்க உள்ளேன். கிராமத்துப் பெண், படித்து நகராட்சி தலைவி ஆகிறாள். மிகவும் படப்பிடிப்பு சீரியசான கேரக்டர். மிடுக்கும் பேச்சில் மிரட்டலும் கொண்ட வேடம். இந்தப் படத்துக்காக நிறைய விஷயங்களை கற்றேன். முதல் பொள்ளாச்சியில் 20 நாட்கள் நடந்தது. விரைவில் அடுத்த கட்ட படப்பிடிப்பு நடக்கும் இவ்வாறு ஷெரில் கூறினார்.

# கவர்ச்சி நடிகைகளின் ஆயுட் காலம் குறைவு -மீராஜெஸ்மின்



தமிழ் -தெலுங்கு திரையுல கில் முன்னணி நடிகையாக இருப் பவர் மீராஜெஸ்மின். இவர் ஐதரா பாத்தில் நடந்ததெலுங்குப் படப்படிப் பின்போது நிருபர்களிடம் கூறியதா வது,


சமீப காலமாக நடிகைகள் பலர் டூ-பீஸ் உடையில் கவர்ச் சியாக நடிக்கத் தொடங்கி இருக்கிறார்கள். இது நல்லதல்ல கவர்ச்சி நடிப்பு நீண்ட நாள் நீடிக்காது கவர்ச்சி நடிகைகள் அழகு இருக்கும் வரைதான் சினிமாவில் நீடிக்க முடியும். அழகு குறைந்தால் அவர்கள் மவுசும் குறைந்துவிடும். ஆனால் நடிப்புத் திறமை உள்ள நடிகைகள் கடைசிவரை சினிமாவில் நீடிக்க முடியும் அவர்களுக்கு தொடர்ந்து வாய்ப்புகள் வந்த வண்ணம் இருக்கும் இவ்வாறு அவர் கூறினார்.

கவர்ச்சிக்கு மாறிய தென் இந்திய நடிகை ஸ்ரேயா கவர்ச்சி நடிப்பால் ரசிகர்கள் மனதை சிறைபிடித்தவர். இவர் தற்போது ஹிந்தி, தமிழ், தெலுங்கு மொழி களில் கலக்கி வருகிறார்.

இது தவிர தற்போது 'தி அதர் என்ட் ஆப் திலைன்' என்ற ஆங்கில படத்தில் நடிக்கவும் ஸ்ரேயா ஒப்புக் கொண்டுள்ளார். ஐதராபாத்தில் நடந்த தெலுங்குப் படப்பிடிப்பின் போது நிருபர்களிடம் அவர் கூறியதாவது, நான் ரஜனியுடன் நடித்த சிவாஜி படம் உலகம் முழுவதிலும் பெரும் வெற்றி பெற்றது. இதனால் எனக்கு வெளிநாடுகளிலும் நல்ல பெயர் கிடைத்தது. நிறைய சினிமா வாய்ப்புகளும் வந்தன.


நான் தமிழ், தெலுங்கு, ஹிந்தி ஆகிய மொழிகளில் நடித்துள்ளேன். ஒவ்வொரு மொழியிலும் தலைசிறந்த இயக்குநர்கள் இயக்கியதால் படம் சூப்பர் ஹிட்டானது.

# ஷாருக் - ரஜினி "ஸ்டார் வோர்"



சந்திரமுகியில் தொடங்கிய பி.வாசு, ப்ரியதர் ஷன் போட்டி இன்னும் முடிவுக்கு வரவில்லை. மலையாள "மணிசித்ரதாழ்" படத்தின் கன்னட உரிமையை வாங்கி "ஆப்தமித்ரா என்ற பெயரில் கன்னடத்தில் ரீ மேக் செய்தார் பி. வாசு. பிறகு பிறகு அதே கதை தமிழில் ரஜினி நடிக்க சந்திரமுகியானது.

மணிசித்ரதாழின் இந்த உரிமையை வாங்கி "பூல் புலையா" என்ற பெயரில் இந்தியில் ரீமேக் செய்தார் ப்ரியதர்ஷன். இது பி.வாசுவுக்கு பிடிக்கவில்லை. ப்ரியதர்ஷன் சந்திரமுகியை காப்பி அடித்ததாகக் குற்றம்சாட்டினார். பிரச் சினை வழக்கு வரை சென்றது.



தற்போது "கதபறையும்போள்" படத்தை குசேலன் என்ற பெயரில் தமிழிலும் குசேலடு என்ற பெயரில் தெலுங்கிலும் ரீமேக் செய்து வருகிறார். பி.வாசு, குசேலனை இந்தியில் டப் செய்து வெளியிடும் எண்ணமும் அவருக்கு உண்டு. அந்த எண்ணத்தில் மண் போடுவது போல கதபறையும் போள் படத்தை பில்லு பார்பர் என்ற பெயரில் ரீமேக் செய்கிறார் ப்ரியதர்ஷன். பில்லு பார்பர் முந்திக்கொண்டால் குசேலன் இந்தி டப்பிங் எடுபடப்போவதில்லை. ஷாருக்கா, ரஜினியா என்ற ஸ்டார் வோர் ஒருபுறம் ஸ்டார்ட் ஆன நிலையில், குசேலனை எடுக்க திட்டமிட்ட அதே பொள் ளாச்சி லொகேஷனில் படப்பிடிப்பை நடத்தப் போகிறாராம் ப்ரியதர்ஷன். பனிப்போர் இதனால் பெரும் போராக வெடிக்கலாம் என்கிறார்கள்.



# சினி விமர்சனம்



# அரசாங்கம்

அரசாங்கத்தை பிடிப்பதற்காக கட்சி ஆரம்பித்த விஜயகாந்தின் 150 ஆவது படம் அரசாங்கம். இதுவும் தீவிரவாதிகளிடம் இருந்து நாட்டைக் காப்பாற்றும் அரைத்த மாவு கதைதான். ஆனால் திரைக்கதையில் மட்டும் சாமர்த்தியமாக கொஞ்சம் வித்தியாசத்தை புகுத்தியிருக்கிறார் இயக்குநர் மாதேஷ்.

விஜயகாந்த் படம். அதிலும் விஜயகாந்த்துக்கு பொலிஸ் அதிகாரி வேடம் என்றால் சொல்லவா வேண்டும். வழக்கம்போல பின்னியெடுத்திருக்கிறார். இந்திய நாட்டின் தலைசிறந்த குடிமகன்கள் ஒவ்வொருவராக கொல்லப்படுகிறார்கள். நாட்டையே உலுக்கி எடுக்கும் தொடர் கொலை குறித்து விசாரிக்க விசாரணை அதிகாரியாக பிஜுமேனன் நியமிக்கப்படுகிறார். 'அவரையும் தீவிரவாதக் கும்பல் கொன்று விடுகிறது. அதன் பிறகு வழக்கம்போல அதிகாரிகளின் ஆலோசனை. தீவிரவாதிகளை ஒடுக்க களம் இறக்கப்படுகிறார் கப்டன். குற்றவியலில் நிபுணத்துவம் பெற்ற விஜயகாந்த் தீவிரவாதிகளை அழிக்கத் திட்டம் வகுக்கிறார். இந்திய நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைக்க தீவிரவாதிகள் திட்டமிடுவதை கண்டுபிடிக்கிறார். தீவிரவாதிகள் தங்கள் திட்டத்தை நிறைவேற்ற இந்திய நாட்டின் தலைசிறந்த விஞ்ஞானிகள், பொருளாதார நிபுணர்கள், முக்கிய அரசியல் தலைவர்கள் என பெரிய மனிதர்களையெல்லாம் குறிவைக்கிறார்கள். அவர்களையும், நாட்டையும் விஜயகாந்த் எப்படிக் காப்பாற்றுகிறார் என்பதுதான் மீதிக் கதை. வழக்கமான விஜயகாந்த் படம் பார்க்கப் போனால் கண்டிப்பாக ஏமாந்துவிடுவீர்கள். பட தொடக்கத்தில் ஹீரோவின் "பில்டப், பஞ்ச் டயலாக், க்ளைமாக்ஸ்" புள்ளி விபரம், அரசியல் மறைமுக தாக்குதல்போன்ற அம்சங்கள் எதுவும் அரசாங்கத்தில் இல்லை. படத்தின்முதல் பாதி "எக்ஸ்பிரஸ்' வேகத்திலும். இரண் டாவது பாதி "சிட்டி பஸ்" வேகத்திலும் செல்கிறது.

**வழக்கம்போல் பின்னியெடுத்திருக்கிறார்**

கொளு கொளு உடற்கட்டுடன் இருக்கும் நாயகி நவ்நீத்கவுர் அழகு பதுமையாக வந்துசெல்கிறார். அவருக்கு நடிப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. சண்டைக் காட்சிகளும் விஜய காந்த் படம் பார்ப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தவில்லை.

ஒளிப்பதிவாளர் வெங்கடேஷின் கேமரா பதிவு, கண்களுக்கு குளிர்ச்சியூட்டுகின்றன. ஸ்ரீகாந்த் தேவாவின் இசையில் "சின்ட் ரல்லா பாடல்" ரசிக்க வைக்கிறது.

அரசாங்கம்– வித்தியாசம்



# வசூல்

நடிகைகளை காதலித்தால் ஏற்படும் விளைவுகள், விபரீதங்களை தத்ரூபமாக விளக்கியிருக்கும் படம் வசூல். படத்தின் தலைப்பு மட்டுமல்ல படத்தின் வசூலும் நன்றாகவே இருக்கும் என்று நம்பலாம்.

**வசூல் -நடிகையின் அந்தரங்கம்**

இந்தப் பபடத்தில் நடிகை கிரண் நடிகையாகவே வருகிறார். நடிகை கிரணை ஆடிட்டர் ஹேமந்த் குமார் காதலிக்கிறார். காதல் ஒருபுறம் இருக்க... நடிகைகளில் அந்தரங்க வாழ்க்கைக்கு இவர் மட்டும் விதிவிலக்கா என்ன? காதலனுக்கு தெரியாமல் பலருக்கு இரையாகிறார். ஹேமந்த் குமாரின் நண்பராக வரும் தாதா ரிஷிராஜின் (இவர்தான் படத்தின் டைரக்டர்)ஆசைகளையும் அவ்வப்போது நிறைவேற்றுபவரும் அதே கிரண்தான்.

நண்பனுக்காக எதையும் செய் வேன் என்று மார்தட்டிக் கொள்ளும் ரிஷிராஜ்-தன் நண்பன் காதலிப்பது அடிக்கடி தனக்கு இரையாகும் நடிகை கிரணைத் தான் என்பது தெரிந்து அதிர்ச்சி அடைகிறார். இந்தக் காதல் வேண்டாம் என்று ஹேமந்திடம் எடுத்துக் கூறுகிறார். ஒரு கட்டத்தில் தனக்கும், நடிகை கிரணுக்கும் இடையே இருக்கும் அந்தரங்க உறவை வெளிச்சத்துக்குக் கொண்டு வருகிறார் தாதா. ரிஷிராஜ் அப்போ உண்மைக் காதலனின் நிலை...? குழப்பத்துக்கு அடிமையாகி விடுகிறார். தனது நண்பனை இந்தக் கதிக்கு ஆளாக்கிய நடிகை கிரணை போட்டுத்தள்ள வேண்டும் என்று துடிக்கிறார் ரிஷிராஜ். அதற்குள் ஹேமந்த்தே கிரணை கடத்தி விடுகிறார் நடிகை கிரணின் நிலைமை என்ன ஆனது என்பதே க்ளைமாக்ஸ்.

ஜெமினிப்படத்தில் பார்த்த கிரண் கொஞ்சம் இளமையாக இருந்தார். ஆனால் வசூல் படத்தில் இளம் நாயகி என்ற பெயரில் முதிர் நாயகியாகத்தான் தெரிகிறார். கொழுக் மொழுக் என்ற உடலை வைத்துக்கொண்டு கிரண்போடும் ஆட்டம் இருக்கிறதே... அப்பப்பா...! என்ன கொடுமை சார் இது? என்று கேட்க வைக்கிறது. தனது காதலன் ஹேமந்த் குமாரை சினிமா பைனான்சியர் ஒருவரிடம் பிரதமர் என்று அறிமுகப்படுத்தும் காட்சியில் வெகுளித்தனமாக நிற்கும் ஹேமந்த் குமார் ரசிக்க வைக்கிறார். ஏண்டி இப்படி இருக்கிறீங்க? உண்மையான காத லுக்கு இதுதான் மரியாதையா? என்று ஒட்டுமொத்தமாக பெண்ணினத்தையும் சேர்ந்து வெளுத்துக் கட்டும் காட்சியில் ஹேமந்த்தின் ஆக்ரோஷமும் ரசிக்க வைக் கிறது. இன்னும் முயற்சித்தால் அடுத்த படத்திலாவது வெற்றி வாகை சூடலாம்.

ரஷிராஜ் இந்தப் படத்தில் ஹீரோவா, வில்லனா என்று பல காட்சிகளில் குழப்பம் ஏற்படுகிறது.

நீண்ட தலைமுடியுடன், தாதா தோரணையுடன் கடைசிவரை வந்து பயமுறுத்துகிறார். சீரியசான சில காட்சிகள் சிரிப்பாகி விடுகிறது. பாடல் காட்சி களில் கிரணின் கிளாமர் ஆட்டம் முகம் சுளிக்க வைக்கிறது.

# "தூக்கிச் சாப்பிடுவேன்..."

## சிம்ரன் பேட்டி



வேல் படத்தை அடுத்து ஹரி இயக்கவிருக்கும் படம் சேவல். ஒரு சேவலின் மேல் உட்கார்ந்து பரத் சவாரி போவது போல் அழைப்பிதழ் அடித்திருந்தார்கள். இப்படி அழைப்பிதழ் மற்றும் விளம்பர விஷயங்களில் சப்பென்று இருந்தாலும். விறுவிறுப்புக்குப் பஞ்சமே இருக்காது. ஹரியின் படங்களில்.

சேவல் பற்றி என்ன சொல்கிறீர்கள் ஹரி? நான் இயக்கும் 9ஆவது படம் இது. வாலிப முறுக்கோடு ஒரு சேவல் போல் திரியும் ஒரு கிராமத்து வாலிபன் அடைகாக்கும் கோழியாக மாறி நடக்கும் கேரக்டரில் பரத் நடிக் கிறார். நீண்ட இடைவெளிக்குப் பிறகு சிம்ரன் முக்கிய வேடத்தில் நடிக்கிறார். அவரிடம் கதையை சொன்ன போது இதுபோல் ஒரு பாத்திரத்தில் நடித்ததில்லை. இந்த வேடத்தில் பரத்தை தூக்கி சாப்பிடப் போகிறேன் பாருங்கள் என்றார். தாமிரபரணி படத்தில் பிரபுவின் மனைவிதான் நதியா என்ற சஸ்பென்ஸ் எப்படி கடைசியில்தான் தெரிந்ததோ, அதுபோல இதிலும் சஸ்பென்சான வேடம் சிம்ரனுக்கும், படம் முழுக்க நெல்லை தமிழில் பேசியிருக்கிறார் பரத்.



என்னை நடிப்பில் தூக்கி சாப்பிடுவதாகக் கூறியிருக்கிறார் சிம்ரன். பார்ப்போம்...யார் யாரை தூக்கி சாப்பிடப் போகிறார்கள் என்று? இப்படி மறுசவால் விடுகிறார் பரத். சபாஷ் சரியான போட்டி!

மாநகர சபை, யாழ்ப்பாணம்.



நாய் தன் இனத்தை வெறுக்கும் அந்த இன வெறுப்பை-அது மனிதர்களிடம் கற்றுக்கொண்டது
-ஸ்பெயின்

வலம்புரி

## தமிழ்-முஸ்லிம் இனமோதல் கிழக்கில் வெடிக்கும் அபாயம்

கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சராக பிள்ளையான், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவியேற்றுள்ளார்.

பிள்ளையானை முதலமைச்சராக்கியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அரசின் சார்பில் கிழக்கு மாகாணத்தில் போட்டியிட்டு வெற்றியீட்டிய ஹிஸ்புல்லா தனித்து இயங்க முடிவு செய்துள்ளார்.

ஹிஸ்புல்லாவின் எதிர்ப்பை சமாளிப்பதற்கு, பாண்டவர்-திரௌபதி திருமண பந்த முறையை ஜனாதிபதி பின்பற்ற முற்பட்டார்.

அதாவது நான்கு வருட ஆயுளைக் கொண்ட மாகாண சபையின் ஆட்சியில் இரண்டு வருடங்கள் பிள்ளையானும் அடுத்த இரு வருடங்கள் ஹிஸ்புல்லாவும் முதலமைச்சராக இருக்கலாம் என்பதே ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்டது.

எனினும் அந்த முறையை ஏற்றுக் கொள்ளாத ஹிஸ்புல்லா தன்னுடன் மேலும் இரண்டு முஸ்லிம் உறுப்பினர்களை சேர்த்து தனித்து இயங்கப் போவதாக அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பு கிழக்கு மாகாணத்தின் பெரும்பான்மை பலத்தை ஆரோக்கியமற்றதாக்கும் என்பதுடன் மட்டுமல்லாது அரசியல் புலத்தில் தமிழ்-முஸ்லிம்களுக்கான மோதலின் ஆரம்பமாகவும் கொள்ளலாம்.

ஆக கிழக்கு மாகாணத்தின் பிரிப்பு, மாகாண சபைத் தேர்தல் அனைத்துமே தமிழ்-முஸ்லிம் இனங்களுக்கிடையே மோதலை தோற்றுவிக்கக்கூடியதென்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

இதுவே கிழக்கு மாகாணத்தைப் பிரிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தவர்களின் இலக்காகும். அந்த இலக்கு நிறைவேறும் சந்தர்ப்பம் உருவாகி விட்டது.

கிழக்கில் ஒற்றுமையாக இருந்த தமிழ்-முஸ்லிம் மக்களின் நல்லுறவைப் பாதிக்கும் தேர்தல் நடந்து முடிந்து விட்டது.

எதிர்காலம் தமிழ்-முஸ்லிம் மக்களுக்கிடையே மோதல், கலகம், இன வன்முறை என்பதே செய்தியாகும்.

இத்தகைய துரதிர்ஷ்டம் இடம்பெறாமல் இருப்பதில் தமிழ்-முஸ்லிம் சகோதரர்கள், அரசியல்வாதிகளின் கபடத்திற்கு ஆட்பட்டு, ஆபத்தை அனுபவிக்காமல் இன ஒற்றுமையைப் பேணுவதில் உறுதியாக இருக்க வேண்டும்.

கிழக்கு மாகாணத்தின் பிரிப்பு என்பது தற்காலிகமானது. இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்று உருவாகும் போது அது வடக்கையும் கிழக்கையும் இணைப்பதாகவே இருக்கும் என்பதை உணர்தல் நல்ல தாகும்.

# தமிழ் மொழிமூல ஆசிரிய ஆலோசகர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை

## பிரதி கல்வி அமைச்சர் எம். சச்சிதானந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்மொழி மூல ஆசிரிய ஆலோசகர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென பிரதிக் கல்வி அமைச்சர் எம். சச்சிதானந்தன் தெரிவித்தார். கடந்த வாரம் கல்வி அமைச்சில் நடைபெற்ற தமிழ் மொழி மூல பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் தொடர்பான கலந்தாலோசனைக் கூட்டத்தின் போதே பிரதி அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாடளாவிய ரீதியில் 6ஆயிரம் ஆசிரிய ஆலோசகர்கள் சேவையில் உள்ளனர். இருந்த போதிலும் தமிழ் மொழி மூல பாட விடயங்களுக்கான ஆசிரிய ஆலோசகர்களின் எண்ணிக் கை வடக்கு- கிழக்கு மற்றும் மலையக பிரதேசங்களில் குறைவாக இருப்பதாக எனது கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதனைக் கருத்திற் கொண்டு தமிழ் மொழி மூல ஆசிரிய ஆலோசகர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கான நடவடிக்கையின் நிமித்தம் இது தொடர்பான தரவுகள் தேசிய கல்வி நிர்வாகத்திடமிருந்து பெறப் படவுள்ளதாக அவர் குறிப் பிட்டார்.

இத்தரவுகள் கிடைக்கப் பெற்றதும் தமிழ் மொழி ஆசிரிய ஆலோசகர்க ளின் எண்ணிக்கை அதிகரிப்பதன் பொருட்டு நியமனங்களை வழங்குவதற்கான பணிப்புரைகள் மாகாணக் கல்வி அமைச்சுக்களுக்கு வழங்கப்படுமென பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்தார் .

இதேவேளை இக்கூட்டத்தில் கலந்து கொண்ட தேசிய கல்வி நிர்வாகத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் நாயகம் எஸ். பண்டார கருத்து தெரிவிக்கையில்,

அடுத்த வருடம் முதல் ஆசிரியர் வழிகாட்டி கைநூலை இறுவெட்டு (சீடி) வடிவில் ஆசிரியர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

வருடம் தோறும் ஆசிரியர் வழிகாட்டி கைநூலை அச்சிடுவதில் காலதாமதம் ஏற்படுவதை கருத்திற் கொண்டு இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ-5)

## ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களுக்கான மனித மேம்பாட்டுக் கல்விக் களப்பயிற்சி

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் நந்தி அறக்கட்டளை பாடசாலை ஆசிரியர்களுக்காக நடாத்தி வருகின்ற மனித மேம்பாட்டுக் களப் பயிற்சியின் தொடர் செயற் திட்டமாக யாழ்ப்பாண வலய கல்வித் திணைக் களத்துடன் இணைந்து நாளையும் நாளை மறுநாளும் களப்பயிற்சிகள் ஒன்றை ஒழுங்குசெய்து நடாத்தத் திட்டமிடப்பட்டுள் ளது.

இது பேராசிரியர் நந்தி அறக்கட்டளையினால் ஒழுங்கு செய்யப்பட்ட இரண்டாவது களப்பயிற்சியாகும். இக் களப்பயிற்சி யாழ்ப் பாணக் கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் 30 ஆரம்பப் பாடசாலை முதனமை நிலை ஆசிரியர்கள் பங்குபற்றுகிறார்கள்.

பாடசாலை கல்விச் செயற்திட்டத்தில் மனித மேம்பாடு என்ற எண்ணக் கருத்தை உள்ளடக்குவதன் ஊடாக சிறார்கள் மத்தியில் நேரிய சிந்தனையை (Positive Thinking) வளர்த்தெடுக்கும் நீண்ட செயல் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு இச் செயற் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. பேராசிரியர் நந்தி யின் கற்பித்தல் முறையியல் அடிப்படையில் இச் செயலமர்வு திட்டமிடப் பட்டுள்ளது.

இக் களப்பயிற்சியின் வளவாளர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களான திருமதி நாசிரியர் செல்வநாயகம், திருமதி கலைவாணி இராமநாதன், திருமதி தெய்வி தபோதரன், திருமதி ஜனனி தேவானந்த் மற்றும் குழந்தை ம.சண்முகலிங்கம், அவர்களும் பங்குகொள்கிறார்கள். (இ)

## வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திர சுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர் வரும் யூன் மாதம் 3ஆம் திகதி செவ்வாய்க் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளது.

யூன் மாதம் 16 ஆம்திகதி திங்கட் கிழமை சப்பறத்திருவிழாவும், 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும், 18 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும். (ஓ-7)

## ஏழாலையில் செஞ்சிலுவை பரப்புரைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக் கிளையினரால் செஞ்சிலுவை சங்க செயற்பாடுகள் தொடர்பான பரப்புரைக் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4மணிக்கு ஏழாலை தெற்கு ஸ்ரீ முருகபுர மகளிர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத் தில் சங்கத் தலைவிநவமலர் கதிர்மலைநாதன் தலைமையில் சங்கமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப் பரப்புரைக் கூட்டத்தில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக் கிளையின் தலைவர் பேராசிரியர் வீ.கே.கணேச லிங்கம், செஞ்சிலுவைச் சங்க வடக்கு கிழக்கு இணைப்பாளர் கு. பாலகிருஷ்ணன் ஆளுநர் சபை உறுப்பினர் கே.எஸ்துரைரத்தினம் பரப்புரை உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டு பரப்புரை நிகழ்த்துவார்கள். (ஓ-134)

## வினைத்திறமை காண் தடைப்பரீட்சை

இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான வினைத் திறமை காண் தடைப் பரீட்சை -2008 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் யோதனையில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பொருட்டு 2007 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதியன்று உள்ளவாறு கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங் கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் பத்திரங்கள் யூன் மாதம் 16 ஆம்திகதியன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திற்கு கிடைக்கக் கூடியதாக திணைக்களத் தலைவரூடாக அனுப்பப்படல் வேண்டும். மேலதிக தகவல்களை 16.05.2008 வர்த்தமானியில் அன்றி வலம்புரி காரியாலயத் திலோ பார்வையிடலாம். (இ)

## திறப்புவிழா

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் வரையறுக்கப்பட்டது. புதிய கட்டடத் தள திறப்புவிழாவும் மாதாந்த ஒய்வூதியம் வழங்கும் ஆரம்ப விழாவும் சமாசத் தலை மைக் காரியாலயத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக் கிழமை மு.ப.9மணிக்கு சமாசத் தலைவர் சி.சந்திரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்மாவட்ட அரசஅதிபர் க.கணேஷ், வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அ.சுப்பிரமணியசர்மா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். ஆசியுரையை யாழ்.மறைக்கோட்ட முதல்வர் கலாநிதி மைக்கல் சௌந்தர நாயகம் வழங்குவார். (ஓ-7)

# மூவொரு இறை அனுபவம் அன்பில் நிலைத்திருப்போம்

மூவொரு இறை அனுபவம் என்பது அன்பு அனுபவம்தான். அன்பே கடவுள் என்று சொல்கிறோம்; அன்பும் நட்பும் எங்குள்ளதோ அங்கே இறைவன் இருக் கிறார் என்று பவுலடியார் அழகாக எடுத்துரைக் கிறார்.

நம் கடவுள் மூன்று ஆட்களாய் இருந்து ஒருவராக செயல்படுவதும் அதே அன்பினால் தான். இந்த மூவொரு இறை அன்பைப் பற்றி உறவைப் பற்றி யேசுவே வெளிப்படுத்துவதாக நற்செய்தியில் பல இடங்களில் சொல்லப்படுகிறது.

குறிப்பாக கடவுளைத் தந்தை என்று முதன் முதலாக அழைத்து கடவுளின் அன்பே தந்தையின் அன்பு என்று சுட்டிக் காட்டிய முதல் மனிதர் யேசு ஒருவரே. இதை பிலிப்பு திருத்தூதரின் கேள்வி யிலிருந்து புரிந்து கொள்ளலாம் . ஆண் டவரே தந்தயை எங்களுக்கு காட்டும். இதற்கு காரணம் அதுவரையில்கடவுள் வல்வராக அஞ்சுதலுக்கும் பயப்படுத்தலுக்கும் உரியவர் என்று தான் நினைத்து வந்தார்கள். யேசு தான் முதன்முதலாக கடவுளை தந்தை என்று வெளிப்படுத்துகின்றார். மேலும் பல இடங்களில் தனக்கும் தந்தைக்கும் உள்ள உறவைப்பற்றி யேசு சொல்கிறார்.

தந்தையும் நானும் ஒன்றே: நான் தந்தையுள் இருக்கிறேன். தந்தை என்னுள் இருக்கிறார் என்றும் தந்தையை

### பரமபிதா காட்டிய பாதை

நானறிவேன். தந்தையும் என்னை அறிவார் என்றும் தந்தையின் விருப்பத்தையே நாடுகிறேன் என்றும் தந்தையே என் செயலுக்கு சான்று பகர்கின்றார் என்றும் இயேசு கூறுகிறார். அதைவிட மேலாக 'தந்தை மகனை அன்பு செய்கின்றார்' என்றும் சொல்லுகின்றார். இந்த தந்தையாகிய கடவுள் மகன் யேசுவின் மீது கொண்டுள்ள அதே அன்பை இந்த உலகின் மீதும் கொண்டுள்ளார். எனவே தான் இந்த உலகம் உய்வதற்காக தனது ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார்.

அடுத்து இயேசு தந்தை யோடு மட்டுமல்ல, தூய ஆவியோடும் உறவு கொண்டிருந்தார் என் றும் சொல்லு கின்றார். தூய ஆவியைத் துணையாளர் என்று குறிப்பிட்டு எனக்குப் பின் உங்களுக்குத் துணையாளர் ஒருவரை



அனுப்புவேன். அவர் உண்மையின் வழி உங்களை வழி நடத்துவார் என்று தெளிவாகச் சொல்லு கின்றார். இந்தத் தூய ஆவியே வாழ்வு தரும் தண்ணீர் என்று வெளிப்படுத்து கின்றார். நாமும் இன்று மூவொரு இறை யனுபவத்தைப் பெற்று இறையன்பில் நிலைத்திருக்க அழைக்கப்படுகின் றோம். மூவொரு இறைவன் உறவில் இணைந் திருப்பது போல நாமும் இவ்வுலகில் உற வோடு வாழ்வோம். இறையன்பில் நிலைத் திருப்பதென்பது இறைவனின் பிள்ளைகளோடும் அன்பாய் இருத்தல் என்பதாகும்.

ஜோன் ரொபேர்ட்



சீமா (CIMA) அமைப்பு பாடசாலை மாணவர்களுக்கிடையே நடாத்திய ஆங்கில உச்சரிப்புப் போட்டி - 2008 ல் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. நிகழ்வில்மங்கல விளக்கேற்றப்படுவதையும் பல்கலைக்கழக ஆங்கிலத் துறைத் தலைவர் திருமதி ச.ரவீந்திரன், துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கம், விரிவுரையாளர் ச.க.கண்ணதாஸ் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள் :- அபி, கவி)

# கடத்தப்பட்டவரை உடனடியாக மீட்குமாறு வவுனியாப் படைத் தளபதிக்கு நீதிபதி உத்தரவு

(வவுனியா)

வவுனியா வேப்பங்குளம் பகுதியில் கடத்தப்பட்ட குடும்பஸ்தரை மீட்கும் நடவடிக்கைகளை எடுக்கும்படி வவுனியா நகரப் படைத் தளபதி கேணல் பெரேராவிற்கு வவுனியா மாவட்ட நீதிபதி எம். இளஞ்செழியன் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

வேப்பங்குளத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 10.30 மணியளவில் வாகனம் ஒன்றில் சென்ற ஆறு பேர் அடங்கிய ஆயுததாரிகள் துப்பாக்கி முனையில் தனது கணவரைக் கடத்தியிருப்பதாகவும் தொலைபேசியில் 15 இலட்சம் ரூபா கப்பம் தருமாறு மிரட்டியதாகவும் வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் கடத்தப்பட்டவரின் மனைவி செய்த முறைப்பாட்டை விசாரணைக்கு எடுத்தபோதே நீதிபதி மேற்படி உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இந்த வழக்கு விசாரணைகளுக்காக வவுனியா நகரப் படைத் தளபதி கேணல் பெரேராவை நீதிமன்றத்திற்கு வருமாறு அழைத்த நீதிபதி, சந்தேகத்திற்கிடமான பகுதிகளை சோதனை செய்து கடத்தப்பட்ட குடும்பஸ்தரை மீட்குமாறு உத்தரவிட்டிருக்கின்றார்.

அத்துடன் வேப்பங்குளத்தில் அண்மைக் காலமாக ஆயுததாரிகளின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாக முறையிடப்பட்டுள்ளதாகவும் அப் பகுதியில் அண்மையில் 2 கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதாகவும் கேணல் பெரேராவிடம் சுட்டிக்காட்டியுள்ள நீதிபதி,

இத்தகைய சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறும் பொலிஸாருக்கு தகுந்த உதவிகளை வழங்குமாறும் உத்தரவிட்டுள்ளார். (ந-5)

## மோனகுருசாமி, பிரியந்த போனஸ் உறுப்பினர்களாக சிபார்சு

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு கிடைத்துள்ள இரு போனஸ் ஆசனங்களுக்கும் ஆர்.மோனகுருசாமி, கே.பி.பிரியந்த ஆகியோரின் பெயர்கள் சிபார்சு செய்யப்பட்டுத் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் சிங்கள வார வெளியீடு ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார். (ந-5)

## பொலிஸ்மா...

காலம் முடிபடைவதையடுத்து புதிய பொலிஸ்மா அதிபராக கிங்ஸ்லி விக்கிரமரத்ன நியமிக்கப்படவுள்ளார்.

இதேவேளை இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சரத்பொன்சேகாவின் பதவிக் காலம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துடன் முடிபடைகின்றது.

இவரின் பதவிக் காலம் மேலும் ஒரு வருட காலத்திற்கு நீடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ந-5)

## வன்னியில்...

எனினும் சிறிது நேரத்தில் அது ராடர் திரைகளிலிருந்து மறைந்து விட்டது. வானூர்தி மீண்டும் தரையிறங்கியதனால் அது ராடர் திரைகளிலிருந்து மறைந்திருக்கலாம் என்று படைத்தரப்புத் தெரிவித்துள்ளது. (ந-5)

# கடற்புலிகளின் நடமாட்டம்; தமிழகத்தில் படையினர் உஷார்

(சென்னை)

தமிழகக் கடற்படைக்குக் கடற்புலிகளின் நடமாட்டம் குறித்த தகவல்கள் கிடைத்திருப்பதாகக் கூறப்படுவதையடுத்துத் தமிழகம், நாகபட்டினம் கரையோரத்தில் தமிழகக்கடற்படையினர் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடற்புலிகளின் அச்சுறுத்தல் இந்தப் பகுதியில் இருப்பதாகத் தெரிவித்தே தமிழகக் கடற்படையினர் நாகபட்டினம் கடற்பரப்பில் பாதுகாப்பைப் பலப்படுத்தியிருப்பதாக இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனொரு கட்டமாக நாகபட்டினத்தில் தமிழகக் கடற்படையினர் தொடர்ச்சியான கண்காணிப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் இதற்குத் தமிழக விமானப் படையினரும் உதவி வருவதாக தெரியவருகிறது. (ந-5)

## ஜனாதிபதி மகிந்த ராஜ...

களைப் பெற்று வெற்றியீட்டியவர்.

கிழக்கு மாகாண முதலமைச்சராகப் பிள்ளையான் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட பின்னர் வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கிழக்கு மாகாணத் தேர்தல் பிரசாரத்தின் போது அரசாங்கத்தின் சார்பாக வாக்கு வேட்டையில் ஈடுபட்ட அனைத்து முஸ்லிம் அமைச்சர்களும் ஜனாதிபதியின் முஸ்லிம் ஆலோசகர்களும் ஆளுநர்களும் மக்களுக்கு அளித்த ஒரே வாக்குறுதி கூடுதலான பிரதிநிதிகளை வென்றெடுக்கும்பட்சத்தில் ஹிஸ்புல்லா முதலமைச்சராக நியமிக்கப்படுவார் என்றுதான்.

இந்தப் பிரசாரத்தில் கிழக்கு மாகாணத்தில் முன்னணி வகித்தவர் அமைச்சர் அதாவுல்லா. இந்த வாக்குறுதிகளை மலைபோல் நம்பிய முஸ்லிம்கள் அரசாங்கத்திற்கு அதிகளவு வாக்குகளை அளித்தனர்.

ஆனால் இன்று அந்த வாக்குறுதிகள் அனைத்தும் மீறப்பட்ட நிலையில் முஸ்லிம்கள் ஏமாற்றப்பட்டு அரசுக்கு வாக்களித்த முஸ்லிம் மக்கள் அரசியல் அநாதைகள் ஆக்கப்பட்டுள்ளனர்.

முஸ்லிம் முதல்மைச்சரைப் பெற்றுத் தருவதாகக் கூறி மார்தட்டிக் கொண்ட முஸ்லிம் அமைச்சர்கள் இன்று தமது நிலையை நினைத்து வெட்கித் தலைகுனிந்தவர்களாக உள்ளனர்.

வெற்றிபெற்றும் கூட அந்த வெற்றியைக் கொண்டாடவோ, உரிமை கோரவோ முடியாமல் கூனிக் குறுகிப் போய்விட்டனர். இவர்கள் தம்மை நம்பி வாக்களித்த மக்களுக்குக் கூறப் போகும் ஆறுதல்தான் என்ன?என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## ரவூவ் ஹக்கீம் முதலமைச்...

உறுதி மொழியை நிறைவேற்றத் தவறியிருப்பதாகவும் பி.பி.ஸி. செய்திச் சேவைக்குக் ஹிஸ்புல்லா கூறியுள்ளார்.

பிள்ளையானை முதலமைச்சராக நியமிப்பதற்குத் திட்டமிட்டிருப்பதாக ஜனாதிபதி தன்னிடம் நேற்று முன்தினம் காலை கூறியதாகவும் எனினும் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்பதால் தான் உட்பட மூன்று முஸ்லிம் பிரதிநிதிகள் தனித்துச் செயற்படுவதாகக் கூறி கிழக்கு மாகாண ஆளுநருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

மூன்று இனங்களுக்கும் சுழற்சி முறையில் முதலமைச்சர் பதவி வழங்குவது பற்றி ஜனாதிபதி தன்னுடன் கலந்துரையாடியதாக பி.பி.ஸி. செய்திச் சேவைக்குக் கூறியிருந்த ஹிஸ்புல்லா,

அவ்வாறு சுழற்சி முறையில் முதலமைச்சர் பதவி வழங்குவதாயின் முதலில் தனக்கே வழங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்ததாகக் கூறினார்.

ஜனாதிபதி வழங்கிய உறுதிமொழி மீறப்பட்டுள்ள நிலையில் தொடர்ந்தும் ஏமாற்றப்படலாம் என அவர் கூறினார். கிழக்கு மாகாண சபையில் தற்பொழுது ஆளும் கட்சிக்கு 17 ஆசனங்களும் எதிர்க்கட்சிக்கு 15 ஆசனங்களும் உள்ள நிலையில், முதலமைச்சர் பிள்ளையானுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தால் அதற்கு ஆதரவு வழங்குவது பற்றி இன்னமும் எந்தவித தீர்மானமும் எடுக்கப்படவில்லை எனவும் ஹிஸ்புல்லா கூறியுள்ளார்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்று முடிந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 18 ஆசனங்களைப் பெற்றதுடன் 2 மேலதிக ஆசனங்கள் உள்ளடங்கலாக 20 ஆசனங்களைப் பெற்றிருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணைந்து 15 ஆசனங்களையும் ஜே.வி.பி. ஒரு ஆசனத்தையும் தமிழ்த் தேசிய ஜனநாயகக் கூட்டமைப்பு ஒரு ஆசனத்தையும் பெற்றிருந்தன.

ஹிஸ்புல்லா உட்பட மூவர் தனித்துச் செயற்படத் தீர்மானித்துள்ள நிலையில் கிழக்கு மாகாண சபையில் அரசாங்கம் அறுதிப் பெரும்பான்மையையிழந்துள்ளது.

இந்த நிலையில் ஹிஸ்புல்லா தலைமையிலான மூவரும் எதிர்க்கட்சிக்குச் சென்று மேலும் ஒரு உறுப்பினரை எதிர்க்கட்சித் தரப்புக்கு இழுத்துக் கொண்டால் ஐக்கிய தேசியக் கட்சி கிழக்கு மாகாண சபை ஆட்சியை கைப்பற்ற முடியும் என அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறு அரசியல் அவதானிகள் கூறியுள்ள நிலையில் எதிர்க்கட்சியிலிருந்து சகோதரர் ரவூவ் ஹக்கீம் அல்லது வேறொரு முஸ்லிம் பிரதிநிதி முதலமைச்சராக நியமிக்கப்பட்டால் அதற்குத் தாம் பூரண ஆதரவு வழங்குவதாகக் ஹிஸ்புல்லா பி.பி.ஸி. செய்திச் சேவைக்குக் கூறியிருந்தார். (ந-5)

## கைக்குண்டுத்...

வாகனத்தை நோக்கி இந்தக் கைக்குண்டு வீசப்பட்டதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும் இந்தக் கைக்குண்டு இலக்குத் தவறி பொதுமக்கள் அதிகமாக நின்ற பகுதியிலேயே வீழ்ந்து வெடித்தது. இதனால் அப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

அப் பகுதியில் நின்ற பஸ்ஸிலிருந்தவர்களும் கடை ஒன்றினுள் இருந்தவர்களுமே இந்தத் தாக்குதலில் அதிகளவில் காயமடைந் தனர்.

கைக்குண்டுத் தாக்குதல் நடந்த இடத்தில் நின்ற 10 ஆண்களும் 7 பெண்களும் என 17 பேர் இந்தத் தாக்குதலில் காயமடைந்தனர். இவர்கள் அனைவரும் உடனடியாக வவுனியா வைத்தியசா லைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். (ந-5)

## குண்டு பொருத்திய மோ. சைக்கிள்...

கொழும்பிலிருந்து திருகோணமலைக்குச் சென்ற இரகசியப் பொலிஸ் பிரிவினர் இவரைக் கைது செய்து கொழும்புக்கு அழைத்து வந்துள்ளனர்.

சந்தேக நபரின் மூன்று சகோதரர்களும் பெற்றோரும் கைது செய்யப்பட்டுத் திருகோணமலைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். திருகோணமலை பத்தாம் குறிச்சியைச் சேர்ந்த 25 வயதுடைய ஜெயபாலன் ஜனார்த்தன் என்ற வாலிபரே கைது செய்யப்பட்டவர் ஆவார்.

இவர் வாகனங்களை கமிஷன் அடிப்படையில் வாங்கி விற்பவர் என ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் மோட்டார் சைக்கிள் ஐந்து வருடங்களுக்கு முன்னர் கொழும்பிலுள்ள ஒருவருக்கு விற்பனை செய்யப்பட்டிருப்பதாக அறிய முடிகின்றது.

இதேவேளை குண்டுத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் மோட்டார் சைக்கிள் பிள்ளையானின் நெருங்கிய நண்பர் ஒருவருடையது என குற்றப்புலனாய்வுப் பிரிவினரை மேற்கோள்காட்டி இணையத் தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பாகப் பலர் கைது செய்யப்பட்டிருப்பதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் மற்றும் காயமடைந்தவர்களுக்கு நட்டஈடு வழங்கப்படவிருப்பதாக அனர்த்த நிவாரண சேவைகள் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் ரிசாட் பதியுதீன் அறிவித்துள்ளார்.

உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஒரு இலட்சம் ரூபாவும் காயமடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாவும் நட்டஈடாக வழங்கப்படுமென அமைச்சர் கூறியுள்ளார்.

குண்டுவெடிப்பில் உயிரிழந்த பொலிஸ் அதிகாரிகளின் குடும்பங்களுக்குப் பொலிஸ் திணைக்களமூடாக நட்டஈடு வழங்கத் திட்டமிட்டிருப்பதுடன் காயமடைந்த பொலிஸ் அதிகாரிகளுக்கும் நட்டஈடு வழங்கப்படுமெனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார். (ந-5)


APEX HOSPITAL
(PVT) LIMITED
தேவை
மருத்துவ உதவியாளர்கள் (பெண்கள்)
வயதெல்லை:- 18-25 கல்வித் தகைமை: -G.C.E (O/L)
விண்ணப்ப முடிவு :- 20.05.2008
விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளும் இடம்:-
நாவலர் பதிப்பகம்,
112, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (C-1112)



வெற்றியின் முத்திரை !!
திருமலை.எஸ்.கணேசலிங்கம் அவர்களின்
எதிர்பார்க்கும் வினாக்கள் அடங்கிய வினாப்பத்திரம்
2008 தரம் : 5 வெற்றித்தேர்வு 25ம் இன்னும் 10 தேர்வுகள்
புத்தகசாலைகளில் பதிவு செய்து தொடராகப் பெறுங்கள்.
தரம் :4, 5 மாவட்டப் பரீட்சை
ஒவ்வொரு ஞாயிறும் 6am, 8am, 10am, 2pm, 4pm
நல்லூர் சயன்ஸ் அக்கடமி
மாணவர்கள் எவரும் பரீட்சை எழுதலாம்.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.1 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.05.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.